


22.01.2025 -புதன்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 75 குரோதி வருடம் தை மாதம் 09 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 23 பக்கங்கள் - 12




### "விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டேன்"

# சூழ்ச்சியை கண்டறியுமாறு சிறீதரன் சபையில் கோரிக்கை

கனடாவில் உள்ள தடை செய்யப்பட்ட அமைப்புடன் கலந்துரையாடவே நான் சென்னை செல்ல இருந்ததாகவும், அதனாலேயே விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனியார் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டி தொடர்பில் விசாரணை நடத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்த தெரிவித்த சிறீதரன் எம்பி,நான் அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற அயலக தமிழர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த போது, விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டேன். அதனை தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே எனக்கு இந்தியா செல்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

நான் இலங்கை திரும்பியவுடன் விமான நிலையத்தில் விசாரணைகளை மேற்கொண்ட போது, என்மீது (தொடர்ச்சி...) 02

**தடைசெய்யப்பட்ட அமைப்புக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை**



### புதிய சட்டம் வரும்வரை

# பயங்கரவாதச் சட்டம் அமுலில் இருக்கும்



புதிய சட்டம் நிறைவேற்றப்படும் வரை பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருக்கும் என அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(21) சிறப்புரிமை கேள்வியொன்றை முன்வைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சிறீதரன் எம்.பி தனது சிறப்புரிமை கேள்வியில், கடந்தவாரம் தாம் இந்தியாவுக்குச் சென்ற தருணத்தில், பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் தம்மை இந்தியா செல்ல அனுமதிக்க முடியாது எனவும் ஆவணங்களை பரிசீலிக்க வேண்டும் எனவும் தெரிவித்து விமான நிலைய குடிவரவு – குடியகல்வு அதிகாரிகள் தடைகளை ஏற்படுத்தியதாகவும் தனக்கு (தொடர்ச்சி...) 02

### முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில்

# 400 ஏக்கருக்கும் மேல் நெல் வயல் அழிந்து நாசம்



செய்தி 2ஆம் பக்கம்

### சிறீதரன் எம்பிக்கு விமான நிலையத்தில் தடை;

## ஹக்கீம் கண்டனம்



சிறீதரன் எம்பியின் இந்திய பயணத்தின் போது அவருக்கு விமான நிலையத்தில் தடைகள் ஏற்படுத்தபட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று (தொடர்ச்சி...) 02

## பொருட்களின் விலை குறையும் சாத்தியம்

(கனூஷியா புஷ்பகுமார்)

மின்சாரக் கட்டணக் குறைப்புக்கு ஏற்ப எதிர்வரும் இரு வாரங்களின் பின்னர் பொருட்களின் விலை குறைவடையும் என அகில இலங்கை சிறு தொழில் வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது. தொழில் துறையின் மின்சாரக் கட்டணத்தை 30 வீதமாக குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 02

# கொழும்புத் துறைமுகத்தில் 4,000 கொள்கலன்கள் தேக்கம்

(கனூஷியா புஷ்பகுமார்)



கொழும்பு துறைமுகத்தில் இன்னும் அகற்றப்படாத சுமார் 4,000 கொள்கலன்கள் தேங்கிக் கிடப்பதாக கொள்கலன்போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொள்கலன்களை துறைமுகத்திலிருந்து வெளியேறுவதற்காக சுமார் 600லொறிகள் துறைமுக வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக பல துறைமுக தொழிற்சங்கத் தலைவர்களைத் தொடர்பு கொண்டபோது, சுங்கத்துறை 24 மணி நேரமும் தொடர்புடைய சேவைகளை வழங்குவதாகக் கூறினாலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் இந்த தாமதம் ஏற்பட்டதாகக் கூறினார். இந்தக்கொள்கலன்களின் சுங்க (தொடர்ச்சி...) 02

## காலநிலை: 20,000க்கும் அதிகமானோர் பாதிப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மையம் இதனால் சுமார் 20,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் (தொடர்ச்சி...) 02

### ஐ.ம.சக்தி - ஐ.தே.கட்சி இணைவுப் பேச்சு: ரணில் அனுமதி

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு, கட்சியின் செயற்குழு பூரணமான அனுமதியை வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற (தொடர்ச்சி...) 02

### கண்டி மாணவி கடத்தல் சம்பவம்;


# கடமையை செய்யாத OIC பணி நீக்கம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி, தவுலகல பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் 19 வயது மகளை கப்பம் பெறும் நோக்கில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தில் கடமைகளை சரியாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகியிருந்த தவுலகல பொலிஸ் தலைமைப் பரிசோதகர் ஆர்.ஏ.எஸ்.எஸ்.ரணசிங்க என்றஅதிகாரியை பணி இடைநீக்கம் செய்யவும் மற்றும் இரு வரை இடமாற்றம் செய்யவும் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பதிநாயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சம்பவத்தின் போது தவுலகல பொலிஸ் நிலையத்தின் நிலைய பதில் பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.எஸ்.எஸ் ரணசிங்க கடமையாற்றியிருந்தார் எனவும் மாணவி கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்ட (தொடர்ச்சி...) 02

## தீவனத்திற்கான வரிவிதிப்பால் கோழி இறைச்சி விற்பனை வீழ்ச்சி



(கனூஷியா புஷ்பகுமார்)

மக்களுக்கு போதுமான வருமானம் இல்லாததால், கோழி இறைச்சியின் தினசரி விற்பனை 100 மெட்ரிக் தொன் குறைவடைந்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்தார். வழக்கமாக நாள் ஒன்றுக்கு 600 மெட்ரிக் தொன் கோழி (தொடர்ச்சி...) 02

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை



போக்குவரத்து பொலிஸாரின் உத்தரவுகளை புறக்கணித்து, செயற்பட்டமைக்காக யாழ்ப்பாண மாவட்ட சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு வருகைதரும் சந்தர்ப்பத்தில், அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் (தொடர்ச்சி...) 02

## குவிந்து கிடக்கும் பொருளாதாரத்தை பரவலாக்கும் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்



நாட்டின் அனைத்துப் பிரிவினரையும் பொருளாதாரச் செயல்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று (21) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற முதற்கட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். செயல்திறனுடனும் திற மையாகவும் பொருளாதார 02

## வெள்ள அபாயத்தில் மன்னார் கிராமங்கள்

( மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)



மன்னார் மாவட்டத்தில் அருவியாற்றினை அண்டிய பல கிராமங்களில் வெள்ள அபாயம்ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறு (தொடர்ச்சி...) 02

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில்

# 400 ஏக்கருக்கும் மேல் நெல் வயல் அழிந்து நாசம்

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட நெல் வயல்கள் வெள்ளத்தில் அழிந்து நாசமாகி உள்ளன.

இந்தப் பிரதேசத்தில் ,இவ்வாண்டு 1400 ஏக்கரில் காலபோக நெற்செய்கை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், தொடர்ச்சியாக பெய்துவந்த அடை மழையால்,அறுவடைக்கு தயாரான நிலையிலிருந்த சுமார் 400 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

பல்வேறு கடன்களை பெற்று நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் தாங்கள் பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பரிதவிக்கின்றனர்.

மழை வெள்ளத்தால் வயல்கள் அழிவடைந்து பல தரப்புக்களுக்கும் அறிவித்து இதுவரை எவரும் வந்து வயல் நிலங்களை பார்வையிட கூட இல்லை என்று கவலை வெளியிட்டுள்ளனர்

கடந்த பருவத்திலும் காப்புறுதி செய்தும் அழிவடைந்த வயல் நிலங்கள் உரிய வகையில் பார்வையிடவோ இழப்பீடு வழங்கபபடவோ இல்லை எனவும் இம்முறையும் இதுவரை எந்த அதிகாரிகளும் வருகை தந்து



பார்வையிடவில்லை எனவும் அரசாங்கம் உடனடியாக தமது நிலைமையை கருத்தில் கொண்டு இழப்பீடுகளை வழங்க முன்வரவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## புதிய சட்டம்...

எதிராக எவ்வித வழக்கும் விசாரணைகளும் இல்லாத சூழலில் இவ்வாறு செயல்படுவதை வன்மையாக கண்டிப்பதாகவும் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தன்னுடன் வருகை தந்திருந்தார். அவர் இந்த விடயங்களை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த உதவினார் என்றும் சிறீதரன் எம்.பி தெரிவித்தார். இதன்போது எழுந்த ரவூப் ஹக்கீம் எம்பி, அதிகாரிகளின் இந்த செயல்பாட்டை கண்டித்ததுடன், அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் விரைவில் உரிய விசாரணைகளை செய்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தின் காலத்திலும் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்றார்.

சிறீதரன் எம்.பியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, "சிறீதரன் எம்.பிக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பில் பின்னர்தான் அறிய கிடைத்தது. இதுகுறித்து வருந்துகிறோம். அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் இவ்வாறு தடைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. அங்கிருந்த அதிகாரிகளே இதனை செய்துள்ளனர். இதுகுறித்து விசாரணை அறிக்கைகளை கோரியுள்ளோம். இந்த விசாரணை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படவில்லை. புதிய சட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாமையால் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் தான் முக்கியம். பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது எமது நோக்கமல்ல " என்றார்.

## வெள்ள அபாயத்தில்..

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரிக்கை விடுத்துள் ளது. தென்னிலங்கையில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை கார ணமாக முக்கியமான பெரிய

குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா எனப்படும் அருவியாற்றினை அண்டிய பகுதிகளாக உள்ள நானாட்டான் மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களுக்கு நேற்றுமுன்தினம் (20) அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மடுக்கரை,இராசமடு,அச்சங்குளம் போன்ற கிராமத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது அருவி ஆற்றில் 13.2 அடி நீர் வரத்து உள்ளது. இந்த நீர்வரத்துக்கு அதிகமானால் மக்கள் கட்டாயம் இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டால் நானாட்டான் டிலாசால் கல்லூரி மற்றும் மோட்டக்கடை சிவராஜா வித்தியாலயங்களில் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

மேலும் அருவி ஆற்றில் நீர்வரத்து அதிகமாகி வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால் அருவி ஆற்றில் மீன்பிடியில் ஈடுபடும் பலர் பாதிக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## தீவனத்திற்கான...

இறைச்சி விற்பனை செய்யப்பட்டது. எனினும் தற்போது தினசரி கோழி இறைச்சி விற்பனை 500 மெட்ரிக் தொன்னாகக் குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கோழிப் பண்ணைகளின் உற்பத்திச் செலவில் 75 வீதம் கால்நடைத் தீவனத்திற்கே செலவிடப்படுவதாகவும், கால்நடைத் தீவனத்திற்கு 20 வீத வரி விதிக்கப்பட்டுள்ளதால் கோழிப் பண்ணை உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்த அவர் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு வரியாக முட்டை ஒன்றுக்கு 6 ரூபாய் மற்றும் ஒரு கிலோ கோழி இறைச்சிக்கு 220 ரூபாய் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

கோழி இறைச்சிக்கான கேள்வி குறைந்து வருவதால், ஒரு கிலோ உறைந்த கோழி இறைச்சியின் (தோலுடன்) விலை 800 ரூபாயாகக் குறைந்துள்ளது. ஒரு முட்டையின் விலை 30 முதல் 33 ரூபாய் வரை குறைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோழி மற்றும் முட்டைகளின் விலைகள் குறைந்துள்ளதால், கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தங்கள் உற்பத்திச் செலவுகளைக் கூட ஈடுகட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியை உற்பத்தி செய்ய 750 ரூபாய் செலவாகும் என்றும், ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 34 ரூபாய் செலவாகும் என்றும் இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்தார்.

## ஐ.ம.சக்தி...

உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தலைமையில் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டம் நிறைவடைந்த பின்னர் அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ராஜித்த சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கூடியது. இதன்போது கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.இதன்போது பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வழிநடத்த தயார்

**-தயாசிறி ஜயசேகர எம்பி**

**(எம்.ஏ.அமீனுல்லா)**

மக்களால் நிராகரிக்கப்பட்ட பழைய தலைவர்களால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வழிநடத்த முடியாது என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கட்சிக்கு தலைமை தாங்க தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் (20) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தயாசிறி ஜயசேகர எம்பி மேலும் கூறியதாவது: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது பதவி வகிக்கும் தவிசாளர் மற்றும் செயலாளர் சட்டரீதியாக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களும் நீதிமன்றத்தினூடாக எந்தவொரு சட்டரீதியான அதிகாரமும் கிடைக்கவில்லை. இன்னுமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொள்ளும் தீர்மானங்கள் அனைத்தும் சட்ட விரோதமானவை.

# மாணவர் போசாக்கு திட்டத்தை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக அரச போசாக்கு வேலைத்திட்டத்தை மேலும் திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக உயர்ந்த பட்சம் 1.5 மில்லியன் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் வரவு செலவுத்திட்டத்தில் நிதியொதுக்குவதற்கும் அமை ச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பாக நேற்று முன்தினம் (20) நடைபெற்ற அமைச்சரவையில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 1-5 வரையான வகுப்புக்களில் மாணவர்கள் தொகை 100 இற்கும் குறைவான அனைத்து அரச பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கும், உள்ளடங்கலாக 1.4 மில்லியன் மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியிலுள்ள 100 கல்வி வலயங்களில் 8,956 பாடசாலைகளில் 'பாடசாலை உணவு வேலைத்திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விமான...

எந்தவிதமான பயணத்தடைம் இல்லை என தெரிவித்தனர்.

ஆனால் சுமந்திரன் இந்தியாவில் என்னை சந்தித்த போது அது தொடர்பில் என்னிடம் எதுவுமே பேசவில்லை. இது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளின் உண்மைதன்மையை ஆராய விரும்புகின்றேன். ஆகவே, குறித்த ஊடக நிறுவன பிரதானியையும் விசாரணை செய்ய விரும்புகின்றேன்.

நான் சீமானுடன் எடுத்துக்கொண்ட ஒரு புகைப்படத்தை சுமந்திரன்,தனது நெருங்கிய நண்பரான ஐயுப் அஸ்மினுடன் இணைந்து முகநூலில் பகிர்ந்ததுடன் முதலமைச்சர் ஸ்டாலின் மத்தியில் ஒரு அவப்பெயரை உருவாக்கவும் என்னை குறித்த நிகழ்வில் கலந்துகொள்ள விடாமல் செய்த சூழ்ச்சி என்றே நான் கருதுகின்றேன் எனவும் சிறீதரன் எம்பி தெரிவித்தார்.

## அச்சுனா...

பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளை வித்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறியமைக்காக

அவரது வாகனத்தை நிறுத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கடுஞ்சொற்களைப் பிரயோகித்து வாக்குவாதத்தில் ஈடுபடும் காணொலியொன்று சமூகவலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

சம்பவ இடத்தில் அர்ச்சுனா போக்குவரத்து விதிகள் மற்றும் தண்டனைக்கோவைச் சட்டத்தில் 22 ஆம் சரத்தின் கீழும் குற்றம் இழைத்தவர் என உறுதியாகி இருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, சம்பவம் தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்தானது, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்புத்...

ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு புதிய இடம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்ததாகவும், வழங்கப்பட்ட இடம் சுங்க ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கும் பின்னணியை வழங்க வேண்டும் என்றும் துறைமுக தொழிற்சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கொள்கலன்கள் துறைமுகத்தில் சிக்கிக் கொள்வதால், அவர்கள் அதிக தாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், அந்தப் பணத்தை டொலர்களில் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த பிரச்சினை குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கொள்கலன்கள் துறைமுகத்தில் தொடர்ந்து குவிந்தால், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை கொண்டு செல்வதில் கடுமையான சிக்கல் ஏற்படக்கூடும் என்று கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொள்கலன் அகற்றும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்று (22) அனைத்து தொழிற்சங்கங்களுடனும் சிறப்பு கலந்துரையாடல் நடத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய தொழிற்சங்க செயலாளர் பிரியந்த பத்பேரிய தெரிவித்தார்.

அதிகாரிகள் இந்தப் பிரச்சினையை முறையாகக் கையாளாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 18ஆம் திகதி காலை 6:30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்தில் பிரதான முனையத்திலிருந்து 2293 கொள்கலன்கள் இறக்கப்பட்டதாக துறைமுக அமைச்சகம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், 2074 கொள்கலன்கள் இலங்கை சுங்கத்தால் அகற்றப்பட்டு துறைமுக வாயிலில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அறிக்கை கூறுகிறது.

## கண்டி...

போது உடனடி நடவடிக்கை எடுக்காதது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்த இடைநிறுத்தம் மற்றும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் ஜி.ஜி.குசும் கமகே, தவுலகல பொலிஸ் நிலையத்தில் இருந்து கடுகன்னாவ பொலிஸ் நிலையத்திற்கும் , குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியாகவிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஜி.ஏ.எஸ். நிமல்சிறி வெலம்படை பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உதவிப் பொலிஸ் அதிகாரி சம்பத் விக்ரமரத்னவின் மேற்பார்வையில் கண்டி குற்றப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## விமான..

எந்தவிதமான பயணத்தடைம் இல்லை என தெரிவித்தனர்.

ஆனால் சுமந்திரன் இந்தியாவில் என்னை சந்தித்த போது அது தொடர்பில் என்னிடம் எதுவுமே பேசவில்லை. இது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளின் உண்மைதன்மையை ஆராய விரும்புகின்றேன். ஆகவே, குறித்த ஊடக நிறுவன பிரதானியையும் விசாரணை செய்ய விரும்புகின்றேன்.

நான் சீமானுடன் எடுத்துக்கொண்ட ஒரு புகைப்படத்தை சுமந்திரன்,தனது நெருங்கிய நண்பரான ஐயுப் அஸ்மினுடன் இணைந்து முகநூலில் பகிர்ந்ததுடன் முதலமைச்சர் ஸ்டாலின் மத்தியில் ஒரு அவப்பெயரை உருவாக்கவும் என்னை குறித்த நிகழ்வில் கலந்துகொள்ள விடாமல் செய்த சூழ்ச்சி என்றே நான் கருதுகின்றேன் எனவும் சிறீதரன் எம்பி தெரிவித்தார்.

## குவிந்து...

செயல்முறையை கையாள்கையில் பொதுப் போக்குவரத்தை நிறுவுவதன் முக்கியத்துவம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

## சறீதரன்...

நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறீதரன் எம்பி தமிழ்நாட்டிற்குப் புறப்படவிருந்தபோது, குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவரைத் தடுத்து நிறுத்தி, அவருக்கு பயணத் தடை இருப்பதாகக் கூறினர். எனினும், பயணத் தடையை விதிக்க நீதிமன்ற உத்தரவு இருக்க வேண்டும்.ஆனால் அத்தகைய நீதிமன்ற உத்தரவு எதுவும் அதிகாரிகளிடம் இருக்கவில்லை. அவற்றை அதிகாரிகளுக்கு விளக்கிய பிறகே ஶ்ரீதரன் எம்பி பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டார்.இது தொடர்பில் எனது கண்டனங்களை தெரிவிக்கிறேன். அத்துடன் இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் ஹக்கீம் எம்பி தெரிவித்தார்.

## காலநிலை...

தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, நேற்று (21) பிற்பகல் பாதுகாப்பு மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவலைத் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக 5,821 குடும்பங்களைச் சேர்ந்த 19,032 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த நிலைமை காரணமாக பதுளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் இரு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அனர்த்தம் காரணமாக உயிரிழக்கும் ஒருவருக்கு வழங்கப்படும் இழப்பீடும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 250,000 ரூபாயாக இருந்த தொகையை 1 மில்லியனாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

## பொருட்களின்...

நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இது 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது.

அதன்படி, நேற்றுமுன்தினம் (20) முதல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான மின்சாரச் செலவுகள் குறைந்துள்ளதாகவும், இதன் விளைவாக, பொருட்களின் விலை 5 வீதம் முதல் 10 வீதம் வரை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வழியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சுமார் இரண்டு வாரங்களில் சந்தைக்கு வெளியிடப்படும் என்றும், இதனால் மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசாங்கத்தின் முக்கிய திட்டங்களுக்கு உலக வங்கி நிதி,தொழில்நுட்ப உதவி

## உலக வங்கியின் தெற்காசிய உப தலைவர் ஜனாதிபதியிடம் உறுதி





அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்டின் ரேசர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (21) நடைபெற்ற சந்திப்பின் போது உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்டின் ரேசர் (Martin Raiser) இவ்விடயத்தை தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், கிளீன் ஸ்ரீலங்கா, கிராமிய வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க இதன்போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

கல்வி, எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வடக்கு அபிவிருத்தி ஆகியவற்றில் புதிய திட்டங்களுக்கு உதவி வழங்குவது குறித்து இதன் போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. உலக வங்கி இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் உதவியை உரிய சமயத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக மார்டின் ரேசர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கல்வித் துறை முன்னேற்றத்தின் மூலம் கிராமிய வறுமையை ஒழிக்க முடியும் என்று குறிப்பிட்டார். அதற்காக புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்த முயற்சிகளுக்கும், பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளை வழங்குமாறு உலக வங்கி பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். இலங்கையின் விவசாயத் துறையில் 28% தொழில்படை ஈடுபட்டிருந்தாலும், இலங்கைப் பொருளாதாரத்திற்கு விவசாயத் துறையிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6வீ பங்களிப்பு கிடைப்பது போதுமானதாக இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார். மக்கள் தொகை அடர்த்திக்கு ஏற்ப இலங்கை மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க புதிய அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் திட்டம் குறித்து உலக வங்கி பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான புதிய திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும், துறைமுக அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்ள இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், நீர் வசதிகளை வழங்கவும், வடக்கு மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார தெரிவித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, உலக வங்கியின் பிராந்திய உள்நாட்டுப் பணிப்பாளர் (நேபாளம், மாலைதீவு, இலங்கை) டேவிட் சிஸ்லன்(David Sislen), உலக வங்கி மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன (IFC) (இலங்கை மற்றும் மாலைதீவு) உள்நாட்டுப் பணிப்பாளர் கெவோர்க் சார்க்சியன் (Gevorg Sargsyan),உப தலைவரின் விசேட உதவியாளர் கிஷான் அபேகுணவர்தன ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** இன்று வளர்ச்சி காண்பீர்கள்.

**ரிஷபம்** இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும்.

**மிதுனம்** ஆரோக்கியத்தை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

**கடகம்** இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும்.

**சிம்மம்** இன்று அனுகூலமான நாள்.

**கன்னி** இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

**துலாம்** ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

**விருச்சிகம்** இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**தனுசு** சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

**மகரம்** இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள்.


**கும்பம்** இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்ளுங்கள்.

**மீனம்** வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 02:51 வரை அஷ்டமி பின்பு நவமி.
**நட்சத்திரம்:** இன்று முழுவதும் சுவாதி.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** உத்திரட்டாதி,ரேவதி.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

# லசித் மாலிங்கவின் ‘கில்லர்’ நூல் வெளியீடு




இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான லசித் மாலிங்க “கில்லர்“ என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் (20) பிற்பகல் கொழும்பில் இந்நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய லசித் மாலிங்க இந்த நூல் பந்துவீச்சாளர்களுக்கு மட்டுமல்லாது, துடுப்பாட்டவீரர்களுக்கும் பொருந்தும். வீரர்கள்,பயிற்றுவிப்பாளர்களுக்கு மதிப்புமிக்க பயிற்சி நுண்ணறிவுகளை வழங்குவதையும், விளையாட்டின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.இந் நூலில் பந்துவீச்சு பற்றிய 21 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்நிகழ்வில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான மார்வன் அத்தபத்து, மஹேல ஜெயவர்தன, சமிந்த வாஸ் மற்றும் அஜந்த மெண்டிஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸ் இக்னாசியோ சன்சேஸ் அமோர் (Jose Ignacio Sanchez Amor) உள்ளிட்ட தூதுக் குழுவினர் (17) சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தனர்.

## முன்னாள் ஜனாதிபதிகளின்

# உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கை

(கனூஷியா புஷ்பகுமார்)

முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லங்களின் மதிப்பு தொடர்பான முழுமையான மதிப்பீட்டு அறிக்கையை பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கைகளை பெற தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கத்தின் தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் விஜேராம மாவத்தையில் காணப்படும் வீடு கடந்த வாரத்தில் அரசாங்கத்தின் மதிப்பீட்டு துறையால் மதிப்பிடப்பட்டதாகவும் குறித்த மதிப்பீடுகளின்படி அதன் மாதாந்த வாடகை 46 இலட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு, முன்னாள் அமைச்சர்களுக்கு எதிர்வரும் காலங்களில் உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்காமலிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியும் உத்தியோகபூர்வ இல்லங்களை பெறாமலிருக்க தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த முடிவிற்குப் பின்னரே இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா நோக்கங்களுக்காக அந்த இல்லங்களில் சிலவற்றை உற்பத்தி ரீதியாகப் பயன்படுத்த எதிர்ப்பார்ப்பதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அதன்படி, அந்த வீடுகளை சுற்றுலாத் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# அண்மைய காலமாக அதிகரித்துள்ள குற்றச் சம்பவங்கள் - விசேட அறிக்கை

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு



(கனூஷியா புஷ்பகுமார்)

அண்மைய நாட்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் சந்தேகத்தின் பேரில் ஒரு இராணுவ மேஜர், ஆறு இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (21) இது தொடர்பில் நீண்ட விளக்கமளித்த அவர், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், “செப்டம்பர் 23ஆம் திகதிக்கு பிறகு நடந்த குற்றங்களைப் பார்க்கும்போது, இராணுவத்தைச் சேர்ந்த ஒன்று அல்லது இரண்டு பேர் பணியில் இருக்கும்போது இந்தச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.”

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு 7 ரீ56 துப்பாக்கிகள்,10 கைத்துப்பாக்கிகள்,14 ரிவோல்வர்கள்,461 துப்பாக்கிகள்,58 துளை துப்பாக்கிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். இந்த 2 மாதங்களுக்குள் 354 கிலோகிராம் ஹெராயின், 3847 கிலோகிராம் கேரள கஞ்சா, 3.8 கிலோகிராம் கொக்கெய்ன், 181.9 கிலோகிராம் ஹஷீஷ் போதைப்பொருள் மற்றும் 759 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நிதி குற்றப் பிரிவு அடுத்த வாரம் மீண்டும் நிறுவப்படும் என்றும் தெரிவித்த அவர், குற்றப் புலனாய்வுத் துறையிடம் உள்ள 29,000 கோப்புகளிலிருந்து நிதிக் குற்றக் கோப்புகளை அந்தப் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

# NPP எம்.பிகளின் ஊதியங்கள் ஒரே வங்கிக்கணக்கில் வைப்பு



தேசிய மக்கள் சக்தியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளும் ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். 1994 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரான நிஹால் கலப்பத்தி தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து கட்சி கடைபிடித்துவரும் பாரம்பரியத்தின்படி இது நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் கூறினார். பொரளை மக்கள் வங்கி கிளையில் உள்ள தற்போதைய வங்கிக் கணக்கில் தொடர்புடைய கொடுப்பனவுகள் வைப்பிலிடப்படும் என்றும், பின்னர் அந்தப் பணம் பொது சேவைக்குப் பயன்படுத்தப்படும் என்றார்.

# 2023 இல் ஸ்ரீலங்கன்,சிபெட்கோ, மின்சார சபைக்கு இலாபம்

(கனூஷியா புஷ்பகுமார்)

2023ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவை இலாபம் ஈட்டியுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

2022ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் ரூ.73.254 பில்லியன் இழப்பைச் சந்தித்தது. 2023ஆம் ஆண்டில் அது 3.8 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 617 பில்லியன் ரூபா நட்டத்தைச் சந்தித்தது. 2023ஆம் ஆண்டில் 120 பில்லியன் இலாபம் ஈட்டப்பட்டது.

2022ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை 298 பில்லியன் இழப்பைச் சந்தித்தது. 2023ஆம் ஆண்டில் 61 பில்லியன் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## ஸ்ரீதரன் எம்.பியின் குற்றச்சாட்டு உட்கட்சி போதலின் வெளிப்பாடு

தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் நேற்று சபையில் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை, கவனத்தை ஈர்த்திருக்கிறது.

சென்னையில் நடந்த அயலவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, கடந்த வாரம் விமான நிலையம் சென்றபோது, தன்னை தடுத்து நிறுத்தியதோடு, குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தியதாக சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

"விமான நிலையத்தில் விசேட அதிதிகள் பயன்படுத்தும் முனையத்தின் ஊடாக அன்றைய தினம் சென்ற பொழுது, எனக்கு பயணத்தடை விதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். என்றாலும், சென்னை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விமான நிலையம் வந்திருந்த, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்த விடயத்தில் தலையிட்டு அதிகாரிகளோடு பேசிய பின்பே, விமானத்தில் ஏறுவதற்கு அனுமதிக்கப்பட்டேன்" என ஸ்ரீதரன் கடும் தொனியில் தனது கருத்தை தெரிவித்தார்.

இந்த விடயத்தை கவனத்தில் கொண்டுவந்த ஸ்ரீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அதன் பின்னணியில் இருப்பதாக பகிரங்கமாக தெரிவித்தார். ஊடகம் ஒன்றிலே இது தொடர்பாக சுமந்திரன் கருத்து தெரிவித்திருந்ததாக ஸ்ரீதரன் கூறுகிறார்.

பயணத்தடை விதிக்கப்படாத ஒரு நிலையில், தன்னை தடுத்து நிறுத்தியது பாரதூரமான குற்றம். உடன் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது ஸ்ரீதரனின் வாதம்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை இங்கே மீறப்பட்டு இருக்கிறது என்பது உண்மை. தமிழக முதலமைச்சரின் அழைப்பின் பேரில், மாநாட்டில் பங்கேற்பதற்குச் சென்றவர் ஸ்ரீதரன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், தமிழர்களின் மூத்த அரசியல் தலைவர் என்ற வகையிலும் அவருக்கு இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் பங்குபற்றுவதை தடுக்கும் வகையிலான ஒரு சதி முயற்சியாக இது இருக்கலாம் போல் தெரிகிறது.

தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற உட்பூசலின் வெளிப்பாடாகவும் இதனை பார்க்க முடிகின்றது. விமான நிலையத்தில் அவர் தடுக்கப்பட்டதற்கு, சுமந்திரன் ஊடகம் ஒன்றில் கருத்து தெரிவித்திருப்பது, கடும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக, ஸ்ரீதரன் கூறுகிறார். சுமந்திரனின், மிக நெருங்கிய நண்பராக இருக்கின்ற, அஸ்மின் என்பவர், அவருடைய முகநூல் பக்கத்தில், சீமானோடு ஸ்ரீதரன் இருக்கும் படத்தை பிரசுரித்து, தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றோடு உறவில் உள்ளவர் என்ற போர்வையில் அவருடைய பிரசுரம் வெளியாகி இருக்கிறது.

தமிழரசு கட்சிக்குள் அதிகார போட்டி தொடர்ந்து கொண்டிருக்கிறது. திருகோணமலையில் நடந்த மத்திய குழு கூட்டத்தில், அந்தக் கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டவர் சிவஞானம் ஸ்ரீதரன். தலைவருக்காக நடந்த போட்டியில், ஸ்ரீதரன் வெற்றி பெற்றார். சுமந்திரன் தோல்வி அடைந்தார்.

என்றாலும், இந்தப் புதிய தலைமைக்கு எதிராக நீதிமன்றத்தில் இடைக்கால தடை விதிக்கப்பட்டிருக்கிறது. புதிய தலைவராக ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டாலும், செயல்படுவதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்தத் தடை விதிக்கப்பட்டு நேற்றுடன் ஓராண்டு பூர்த்தி அடைகின்றது. இந்த நிலையில் தான், நாடாளுமன்றத்தில் நேற்று ஸ்ரீதரன் தனது குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக முன் வைத்துள்ளார்.

தமிழரசு கட்சிக்குள், பல்வேறு தரப்புகள் பிரிந்து செயல்படுகின்றார்கள். இவர்களில் சுமந்திரன் தரப்பு, தாக்கல் செய்த வழக்கிலேயே இடைக்கால தடை தொடர்ந்து வருகிறது என்பது தமிழரசு கட்சிக்குள் பகிரங்கமான ஒரு விடயம். அந்தக் கட்சியின் செயல்பாடுகளை முடக்குகின்ற வகையிலே, ஒரு தரப்பு எடுத்து வருகின்ற சதி முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இந்த விமான நிலைய தடையை பார்க்க முடிகின்றது. கட்சியின், சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என்ற வகையிலும், நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் என்ற வகையிலும், ஸ்ரீதரன் சென்னை மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்ற சதிப் பின்னணியோடு தான் இது நடந்திருக்கக்கூடும் என்று ஊகிக்க முடிகிறது.

பயணத்தடை விதிக்கப்பட்டதாக தடுத்து நிறுத்தி விசாரணை நடத்திய, குடிவரவு குடியகல்வு அதிகாரிகள், அவர் நாடு திரும்பும் போது, எந்தப் பயணத்தடையும் விதிக்கப்படவில்லை என்று ஸ்ரீதரன் எம். பியிடம் தெரிவித்திருக்கிறார்கள். இதன் பின்னணி புரியவில்லை. விமான நிலைய அதிகாரிகளின் செயல்பாடு வேடிக்கையாக இருப்பதோடு, பலத்த சந்தேகங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், அரசாங்கம் இத்தகைய நடவடிக்கை எடுத்திருக்கிறதா...? அல்லது, அதிகாரிகளின் எதேச்சையான போக்கா.... இது என்ற கேள்வி எழும்புகிறது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை என்பதற்கு அப்பால், அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கின்ற விதம் தொடர்பில், அரசாங்கம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற உட்கட்சிப் பூசலும் அதிகாரப் போட்டியும், நாடாளுமன்றத்தில் இன்னும் ஒரு பிரச்சினையை கிளப்பி இருக்கிறது. தமிழரசு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு உரிய ஆசன ஒதுக்கீடு சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கட்சியினால் முன்வைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

நாடாளுமன்றத்தின் முதல் வரிசையில் சினீயோரிட்டி அடிப்படையிலும், கட்சி தலைவர்களுக்கு தான் ஆசனங்கள் ஒதுக்கப்படுவது மரபு.இந்த தடவை கட்சி தலைவர் என்ற அடிப்படையில் ஸ்ரீதரனுக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவருக்கு பக்கத்தில் சாணக்கியனுக்கும் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழரசுக்கட்சியில் சாணக்கியனைவிட இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்களாக மட்டக்களப்பை சேர்ந்த சிறீநேசனும், அம்பாறையை சேர்ந்த கோடீஸ்வரனும் இருக்கிறார்கள்.

இந்த நிலையும் தமிழரசு கட்சிக்குள் குமுறும் எரிமலையாக உருவெடுத்திருக்கிறது.. என்றாலும், தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற தலைமைத்துவ போட்டியும் உட்பூசலும் தமிழ்த் தேசியத்தை கேள்விக் குறியாக்கி இருக்கிறது என்பது யதார்த்தமாக தெரிகிறது.



ஜெயராம் அனோஜன்

# டொனால்ட் ட்ரம்ப்

## அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார்

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் (Donald Trump) திங்கட்கிழமையன்று (20) பதவியேற்றார். பல குற்றச் செயல்கள், இரண்டு குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரு ஜோடி படுகொலை முயற்சிகளுக்குப் பின்னர் ஒரு அதிர்ச்சியூட்டும் அதிகாரத்திற்கு மீண்டும் திரும்பினார். உறைபனி வெப்பநிலை காரணமாக 40 ஆண்டுகளில் முதல் முறையாக உள்ளக அரங்கிற்குள் நடத்தப்பட்ட பதவியேற்பு நிகழ்வில் ஜே.டி. வான்ஸும் துணை ஜனாதிபதியாக பதவியேற்றார். பதவியேற்பு விழாவில் தொழில்நுட்ப பில்லியனர்கள், அமைச்சரவை வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளும் கலந்து கொண்டனர்.



முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பயன்படுத்திய பைபிளைக் கையில் வைத்து, ட்ரம்ப் அமெரிக்க கப்பிட்டலின் ரோட்டுண்டாவிற்குள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஜோ பைடனின் வெற்றியை சவால் செய்ய அவரது ஆதரவாளர்களின் கும்பல் அதே கட்டிடத்தை தாக்கியிருந்தது. 78 வயதான ட்ரம்ப், 19 ஆம் நூற்றாண்டிலிருந்து மீண்டும் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற முதல் அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையையும் பெற்றுள்ளார். பதவியேற்றபின் பின்னர் தனது தொடக்க உரையில் ட்ரம்ப், அமெரிக்காவிற்கு ஒரு "பொற்காலத்தை" அறிவித்தார், தனது தலைமையின் கீழ் நாடு "முன்பை விட பெரியதாகவும், வலிமையாகவும், மிகவும் விதிவிலக்காகவும்" இருக்கும் என்று உறுதியளித்தார். 2024 தேர்தலில் அவர் தோற்கடித்த பைடன் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோரையும் அவர்களும் மற்ற உலக தலைவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது அவர் இழிவுபடுத்தினார்.

"பல ஆண்டுகளாக, ஒரு தீவிர மற்றும் ஊழல் ஸ்தாபனம் எங்கள் குடிமக்களிடமிருந்து அதிகாரத்தையும் செல்வத்தையும் பிரித்தெடுத்துள்ளது" என்று ட்ரம்ப் சாடிப் பேசினார். கடந்த ஆண்டில் அவர் தனது உயிருக்கு அச்சுறுத்தலான கொலை முயற்சிகளை இதன்போது சுட்டிக்காட்டினார். அமெரிக்காவை மீண்டும் வல்லமையாக மாற்ற கடவுளால் தான் காப்பாற்றப்பட்டதாகவும் கூறினார். இதன்போது ரோட்டுண்டாவிற்குள் குடியரசுக் கட்சியினரிடமிருந்து ஒரு கைத்தட்டல் கிடைத்தது. அது மாத்திரமல்லாது, இந்த தருணத்திலிருந்து, அமெரிக்காவின் வீழ்ச்சி முடிந்துவிட்டது, 2025 ஜனவரி 20, 2025 "விடுதலை நாள்" என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

"பொது மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும்" இனம் மற்றும் பாலினத்தை கொண்டு வருவதற்கான அரசாங்கக் கொள்கை என்று கூறுவதை நிறுத்துவதாக ட்ரம்ப் சபதம் செய்தார். "இன்றைய நிலையில், இது இனி அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ கொள்கையாக இருக்கும்" என்று அறிவித்தார். இரண்டு பாலினங்கள் மட்டுமே உள்ளன - ஆண் மற்றும் பெண் என சுட்டிக்காட்டினார். ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்கு மீண்டும் திரும்புவது, நிர்வாக அதிகாரத்தை விரிவுபடுத்துவது, மில்லியன் கணக்காக குடியேறியவர்களை நாடு கடத்துவது, அரசியல் எதிரிகளை குறிவைப்பது மற்றும் அமெரிக்காவின் உலகளாவிய பங்கை மறுவரையறை செய்வது போன்ற வாக்குறுதிகளுடன் மற்றொரு கொந்தளிப்பான நான்கு ஆண்டுகளின் தொடக்கத்தை குறிக்கிறது. புதிய ஜனாதிபதி தெற்கு எல்லையில் ஆயுதம் ஏந்திய படையினரை நிலைநிறுத்தவும், பிறப்புரிமைக் குடியுரிமையை முடிவுக்குக் கொண்டுவரவும், அமெரிக்க நீதிமன்றத் திகதிகளுக்காகக் காத்திருக்கும் போது புகலிடம் கோருவோர் மெக்ஸிகோவில் இருக்க வேண்டும் என்ற கொள்கையை மீண்டும் நிலைநாட்டவும் திட்டமிட்டுள்ளார்.

பதவியேற்பின் முந்தைய நாள், ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா



வெள்ளை மாளிகைக்கு வந்தனர், பைடன் மற்றும் வெளிச்செல்லும் முதல் பெண்மணி ஜில் பிடன் ஆகியோர் அவர்களை வரவேற்றனர். "வீட்டிற்கு வரவேற்கிறோம்" என்று பைடன் கைகுலுக்கும் போது சுருக்கமாக கூறினார். 2024 நவம்பர் தேர்தலில் பணவீக்கத்தின் மீதான பரவலான வாக்காளர் விரக்தியால் உற்சாகமடைந்த ட்ரம்பின் வெற்றி, ஜனநாயகக் கட்சியின் போட்டியாளரான கமலா ஹாரிஸை விட 2 மில்லியனுக்கும் அதிகமான தேசிய மக்கள் வாக்குகளை வென்றது, இருப்பினும் அவர் 50 சதவீத பெரும்பான்மைக்கு குறைவாகவே இருந்தார்.

### முதல் நாளிலேயே ஆட்டத்தை ஆரம்பித்த ட்ரம்ப்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது வாக்குறுதியளிக்கப்பட்ட நிறைவேற்று நடவடிக்கையை பதவியேற்பின் முதலாம் நாளிலேயே ஆரம்பித்துள்ளார். ட்ரம்ப் தனது முதல் தொகுதி குறிப்புகள் மற்றும் உத்தரவுகளுடன், முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் பல நிர்வாக உத்தரவுகளை இரத்து செய்தார் மற்றும் பாரிஸ் காலநிலை ஒப்பந்தங்களில் இருந்து அமெரிக்காவை விலக்கினார். 2021 ஜன. 6 அன்று, அமெரிக்க கேபிடல் மீதான தாக்குதலில், நூற்றுக்கணக்கான நபர்களின் பங்குக்காக மன்னிப்பு வழங்கியதாகவும் அவர் கூறுகிறார். ட்ரம்ப், இதற்கிடையில் முந்தைய நாளில் அவர் பதவியேற்ற பின்னர் முதல் முறையாக வெள்ளை மாளிகைக்குத் திரும்பியதால், அவரது கையொப்பத்திற்காக கூடுதல் நிர்வாக உத்தரவுகள் காத்திருக்கின்றன. அந்த ஆவணங்கள் பன்முகத்தன்மை, சமபங்கு என்பவற்றை உள்ளடக்கிய நிதியுதவியை முடிவுக்குக் கொண்டுவரும், எல்லைக் கடப்புகளை முறியடிக்கும் மற்றும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்திக்கான விதிமுறைகளை எளிதாக்கும்.

### ஜனவரி 6 அமெரிக்க தாக்குதலில் மன்னிப்பு

2024 தேர்தல் பிரச்சாரத்தின் போது மீண்டும் மீண்டும் உறுதியளித்தபடி, ட்ரம்ப் மீதான பைடனின் 2020 வெற்றியை சான்றளிக்க காங்கிரஸ் கூடியபோது, ஜன. 6 அன்று அமெரிக்க மீதான தாக்குதலில் குற்றவாளிகள் அல்லது குற்றவியல் குற்றம் சாட்டப்பட்ட சுமார் 1,500 பேருக்கு மன்னிப்பு வழங்கியதாக ஜனாதிபதி திங்கட்கிழமை பிற்பகுதியில் கூறினார். தனித்தனியாக, ட்ரம்ப் பைடன் நிர்வாகத்தின் "அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு" எதிரான கூட்டாட்சி வழக்குகளை நிறுத்த உத்தரவிட்டார்– அதாவது ட்ரம்ப் ஆதரவாளர்கள். கூட்டாட்சி சட்ட அமுலாக்கத்தின் "ஆயுதமயமாக்கலை" நிறுத்துவதற்கு திங்கட்கிழமையன்று பலமுறை அவர் உறுதியளித்தார்.

### பொருளாதாரம் மற்றும் டிக்டொக்

நுகர்வோர் பணவீக்கத்தை எதிர்த்துப் போராட ஒவ்வொரு கூட்டாட்சி நிறுவனத்தையும் வழிநடத்துவதாக விவரித்த பெருமளவான குறியீட்டு குறிப்பில் ட்ரம்ப் திங்கட்கிழமை இரவு கையெழுத்திட்டார். பைடன் நடவடிக்கைகளை இரத்து செய்வதன் மூலம், ட்ரம்ப் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியின் மீதான ஒழுங்குமுறை சுமைகளை எளிதாக்க முயற்சித்தார். இது அனைத்து நுகர்வோர் பொருட்களின் விலைகளையும் குறைக்க உதவும் என்று அவர் உறுதிளித்தார். குறிப்பாக அலாஸ்காவில் புதைபடிவ எரிபொருட்களைப் பிரித்தெடுப்பதை எளிதாக்க ட்ரம்ப் விரும்புகிறார். வர்த்தகத்தில், பெப்ரவரி 1 முதல் கனடா மற்றும் மெக்சிகோ மீது 25% வரிகளை விதிக்க எதிர்பார்க்கிறேன் என்று ஜனாதிபதி கூறினார், ஆனால் சீன இறக்குமதிகளுக்கு வரி விதிக்கும் திட்டத்தை அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

காங்கிரஸின் டிக்டோக் தடையை 75 நாட்களுக்கு இடைநிறுத்துவதற்கான உத்தரவிலும் ட்ரம்ப் கையெழுத்திட்டார். இந்த காலகட்டத்தில் பிரபலமான சமூக ஊடக தளத்தை அமெரிக்கர்களுக்கு திறந்து விடும்போது தேசிய பாதுகாப்பு நலன்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு ஒப்பந்தத்தில் அமெரிக்க மேற்கொள்ளும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

### அமெரிக்கா முதல் அணுகுமுறை

தனது முதல் நிர்வாகத்தின் கீழ் செய்ததைப் போலவே, ட்ரம்ப் உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றுகிறார், இது சர்வதேச விவகாரங்களுக்கான அவரது தனிமைப்படுத்தப்பட்ட "அமெரிக்கா முதல்" அணுகுமுறைக்கு பொருந்துகிறது. மேலும் குறியீட்டு நகர்வுகளில், மெக்ஸிகோ வளைகுடாவை மறுபெயரிடும் உத்தரவில் கையெழுத்திட ட்ரம்ப் திட்டமிட்டார், அதை அமெரிக்கா வளைகுடாவாக மாற்றினார். மேலும், ஒவ்வொரு எதிர்கால பதவியேற்பு நாளிலும் கொடிகள் கம்பங்களில் முழு உயரத்தில் இருக்க வேண்டும் என்ற உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் மரணம் கொடிகளை அரைக் கம்பத்தில் வைக்கத் தூண்டியதால்

தொடர்ச்சி.... 7ஆம் பக்கம்





# வவுனியா பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரிப்பு

# நெளுக்குளம் - நேரியகுளம் வீதி போக்குவரத்துக்கு தடை







(கி.வசந்தன்)

வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. அதன் 4 வான் கதவுகளும் 2 அடிக்கு மேல் திறக்கப்பட்டுள்ளதால் நெளுக்குளம் - நேரியகுளம் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள் ளதால், அதன் ஒரு வான் கதவு இரண்டரை அடியும், மூன்று வான்கதவுகள் இரண்டு அடியும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் குளத்து நீர் நெளுக்குளம் - நேரியகுளம் வீதியை மேவி பாய்ந்து வருவதால் அவ் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கை யுடனும் இருக்க வேண்டும் எனவும் மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சாவகச்சேரியில் குழந்தையை கிணற்றுக்குள் வீசிய தாய்!

(பு.கஜிந்தன்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கைதடி தென்கிழக்கு, ஜே-292 கிராமசேவகர் பிரிவுக்குற்பட்ட மூர்த்தியாவத்தை கந்தசாமி கோவில் பகுதியில் உள்ள தோட்டக்கிணற்றில் பிறந்து ஒரு நாளான சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்கு காலை குறித்த தோட்டத்தில் வேலை செய்வதற்காக வந்தவர்கள் கிணற்றில் நீர் எடுக்க முற்பட்ட வேளை சிசுவின் சடலத்தை பார்த்ததும் கிராம சேவகர் மூலம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ ார் உயிரிழந்த சிசு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி சம்பவிடத்திற்கு நேரில் சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்ப திகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டலில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சிசுவை பிரசவித்தவர் என சந்தேகிக்கப்படும் 43 வயதான, 3பிள்ளைகளின் தாயான பெண் கிளிநொச்சி பகுதிக்கு தப்பிச்செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கு உதவி செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த பெண்ணின் தாய் மற்றும் சகோதரியையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.கலாசார நிலையப் பெயர் மாற்றம்; மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல்

### பொ.ஐங்கரநேசன் ஆதங்கம்



(பு.கஜிந்தன்)

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் கலாசார பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதும் தனித்துவமிக்கதுமான யாழ்ப்பாண கலாசார நிலையம் 2023 பெப்ரவரி முதலாம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது. திறப்புவிழாக் கல்வெட்டில் அழியாத எழுத்துகளால் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது.

ஆனால், மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங் கள் கூடக் கடக்காத நிலையில் அம்மக்களின் அபிப்பிராயங்கள் எதுவும் பெறப்படாது யாழ்ப்பாண கலாசார நிலையம் திருவள்ளுவர் கலாசார நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ். கலாசார நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகரசபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது. இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ்.மாநகரசபையினதும் வடமாகாண சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டு சபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

கோத்தபாய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்த போது மாநகரசபையின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இப்போது, இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசுக்காக நிறைவேற்றிக்கொடுத்துள்ளது. என்றே எண்ணவைத்துள்ளது.

சமயச்சாயத்தை தன் மீது ஒருபோதும் பூசிக்கொள்ளாத திருவள்ளுவரின் பெருமையை ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் போற்றுபவர்களாகவே உள்ளார்கள். அவர் தமிழுக்குத்தந்த பெரும் கொடையாம் திருக்குறளின் மகிமையை ஈழத்தமிழ் மக்கள் ஒரு போதும் மறவார்கள்.

இதனாலேயே, தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைப் போன்று அத்தனை குறள்களையும் காலத்தால் அழியாதவாறு கருங்கல் லில் பொறித்து திருக்குறள் வளாகம் ஒன்றைச் சிவபூமி தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார். ஆனால், இத்தகைய பெரும் பற்றைத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களிடையே யாழ் கலாசார மையத்துக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளமை பெரும் அதிருப் தியையே தோற்றுவித்துள்ளது.

யாழ். கலாசார மையம் தனித் துவமானதென திறப்புவிழாக் கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அது இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையே ஆகும். ஆனால், அதன் தனித்துவம் நெடிது யர்ந்த அழகான அதன் கட்டுமான ங்களால் மாத்திரம் உருவானதன்று.

பண்பாட்டுச் செழுமையும் பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சூடியிருப்பதும் அதன் தனித்துவத்தை வெளிப் படுத்தும் அளப்பரிய ஓர் சிறப்பாகும். இப்போது, பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் ஒரு படி கீழிறங் கியுள்ளது என்பதே நிதர்சனம். அது மட்டுமல்ல, இப்பெயர் மாற்றத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கையிலும் ஒரு படி கீழிறங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கரையொதுங்கிய மிதவை



வடமராட்சி - பருத்தித்துறை, ஆதிகோவிலடி கடற்கரையில் மிதவை ஒன்று நேற்று (21) கரை யொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற் றால் குறித்த மிதவை கரையொ துங்கியிருக்கலாம் என்று தெரிவிக் கப்படும் அதேவேளை சம்மந்தப் பட்ட அதிகாரிகளுக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

# சகிப்புத் தன்மையை வலுப்படுத்த விளையாட்டுத்துறை ஊக்குவிப்பு அவசியம்







அரச உத்தியோகத் தர்களுக்கான தேசிய வலைப்பந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (21) யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த நவம்பர் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறித்த தேசிய மட்ட வலைப்பந் தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாண மாவட்ட போட்டியாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில், யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்ற 40 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி, இரண்டாம் இடத்தினை பெற்ற 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அணி மற்றும் ஆண்கள் அணிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் பயிற்றுவிப்பாளர்களுக்கும் யாழ் மாவட்ட செயலகத்தினால் சிறப்புக் கௌரவிப்பும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக விளையாட்டுதுறை உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அதிதியாக பங்குகொண்டு உரையாற்றிய மாவட்ட செயலர் ம.பிரதீபன்,

அருகிவரும் சகிப்புத் தன்மையை வலுப்படுத்த விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பது அவசியம் என வலியுறுத் தினார்.

மேலும் விளையாட்டுத்துறை ஒருவருக்கு சிறந்த தலைமைத்துவத்தை கொடுக்கும் ஆற்றல் மிக்கது. குறிப்பாக விளையாட்டுக்களே மனிதனை பூரணமாக்குகின்றது என்பார்கள் ஆனால் இன்று அது கேள்விக்குறியாகியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன் ஒருவர் மற்றவருக்கு ஊக்கம் கொடுக்கும் நிலையிலிருந்து பொறாமை மிக்க சமூகமாக இன்று எமது சமூகம் மாறிவருகின்றது.

இதற்கான பல காரணங்கள் இருந்தாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் பொருளாதார ஈட்டலுக்கான அவசியம் வலுப்பெற்று வருவதால் விளையாட்டு துறையில் ஆர்வம் காட்டுவது குறைந்துவருகின்றது. அதுமட்டுமல்லாது தகுதிக்கேற்ற சந்தர்ப்பங்கள் கிடையாமையும் விளையாட்டுத்துறை பல்வேறு சவால்களை எதிர்கொள்ள காரணங்களாகும்.

இவ்வாறான பல ஏதுநிலைகளால் விளையாட்டு துறையில் கூட சகிப்புத்தன்மையும் விட்டுக்கொடுப்பும் இல்லாது போய் விட்டது. இந்நிலையால் இன்று சமூகத்திலும் பாரிய தாக்கத்தை காண முடிகின்றது.

எனவே ஒவ்வொரு மனிதனையும் ஆளுமையானவனாகவும் தலைவனாகவும் உருவாக்கவல்ல விளையாட்டு துறையில் எமது மாவட அரச துறையினரது வெற்றியும் பங்களிப்பை வழங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது எனவும் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினமும் ஒரு நெல்லிக்காய் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



தற்போதைய டிஜிட்டல் காலத்தில் யாருமே தங்களுடைய ஆரோக்கியத்தில் முழுமையான கவனம் செலுத்துவது கிடையாது. காரணம் வேலைப்பழு, நேரமின்மை, மன உளைச்சல் என தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை முறையை கவனிக்காமல் இருக்கின்றனர்.

சிலர் உடற்பயிற்சி டயட் என தங்களை பழக்கிக்கொண்டாலும் பலர் அதை சரியாக கடைப்பிடிப்பது கிடையாது.

இவ்வாறானவர்கள் மிகவும் எளிமையான முறையில் சிலவிடயங்களை கடைப்பிடிக்கலாம். அந்தவகையில், தினமும் காலையில் ஒரு துண்டு நெல்லிக்காயுடன் வெல்லம் சேர்த்து சாப்பிட்டு வர தங்களின் உடலில் பல அற்புதமான மாற்றங்கள் நிகழ்வதை காணலாம்.

உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பல உணவுகள் இருந்தாலும், நெல்லிக்காய் பெரிதும் உதவி புரியும். ஏனெனில் இதில் விட்டமின் சி அதிகமாக உள்ளது. சொல்லப்போனால் தோடம் பழத்தை விட அதிகமாக நெல்லிக்காயில் விட்டமின் சி உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

### நோயெதிர்ப்பு சக்தி மேம்படும்

நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று இது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

இதற்கு நெல்லிக்காயில் உள்ள விட்டமின் சி தான் காரணம். அதுவும் இந்த நெல்லிக்காயை வெல்லத்துடன் சேர்த்து உட்கொள்ளும் போது, அதில் உள்ள அதிகப்படியான இரும்புச்சத்து மற்றும் கனிமச்சத்துக்களால், உடலின் நோயெதிர்ப்பு மண்டலம் வலுவடைந்து, அடிக்கடி நோய்வாய்ப்படுவது தடுக்கப்படும்.

### செரிமானம் மேம்படும்

நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து உட்கொண்டால், செரிமான மண்டலத்தின் செயல்பாடு சிறப்பாக இருக்கும். ஏனெனில் நெல்லிக்காயில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இது குடலியக்கத்தை சீராக்குவதோடு, மலச்சிக்கலைத் தடுக்கும். எனவே செரிமான பிரச்சனையால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்கள், அதிலிருந்து உடனடி நிவாரணத்தைப் பெற விரும்பினால், நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து உட்கொள்ளுங்கள்.

### சரும ஆரோக்கியம் மேம்படும்

தினமும் நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து உட்கொண்டு வந்தால், அது சருமத்தில் பல அதிசயங்களை ஏற்படுத்தும். ஏனெனில் நெல்லிக்காயில் ப்ரீ ராடிக்கல்களை எதிர்த்துப் போராடும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அதிகம் உள்ளன. இவை சருமம் விரைவில் முதுமை அடைவதையும், சருமம் சேதமடைவதையும் தடுக்கும். அதே போல் வெல்லம் சருமத்தின் நீரேற்றம் மற்றும் நெகிழ்வுத்தன்மையை பராமரிக்க உதவுகிறது. எனவே சரும ஆரோக்கியத்தை மேம்படுத்த நினைப்பவர்கள், தினமும் காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காயுடன், வெல்லத்தை சேர்த்து சாப்பிட்டு வாருங்கள்.

### ஆற்றல் மேம்படும்

காலையில் எழுந்ததும் நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து வெறும் வயிற்றில் உட்கொள்ளும் போது, அது உடலின் ஆற்றலை மேம்படுத்தும். நீங்கள் மிகுந்த உடல் சோர்வை சந்தித்து வந்தால், நெல்லிக்காயுடன் வெல்லத்தை சேர்த்து சாப்பிடும் போது, நாள் முழுவதும் வேண்டிய ஆற்றல் கிடைக்கும்.

### உடல் எடை குறையும்

நீங்கள் உடல் எடையைக் குறைக்கும் டயட்டில் இருந்தால், நெல்லிக்காய் மற்றும் வெல்லத்தை உட்கொண்டு வாருங்கள்.

இதன் மூலம் உடலின் மெட்டபாலிசம் மேம்படுவதோடு, உடலில் இருந்து அதிகப்படியான கலோரிகளும் கரையும். ஆகவே எடையைக் குறைக்கும் டயட்டில் இருப்பவர்கள், காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டு வந்தால், அது உடல் எடையைக் குறைக்க பெரிதும் உதவி புரியும்.

---

ஒருவன் HEALTH GOALS

சுகவாழ்வுக்கோர் வழி



எஸ்.டொரின்

# உப்பு அதிகமாக சேர்ப்பது வயிற்றுப் புற்றுநோயை உண்டாக்குமா?



உணவின் சுவையை நிர்ணயிப்பது என்னவோ உப்பு தான். அதனால் தான் உப்பில்லா பண்டம் குப்பையிலே என கூறுவார்கள்.

உப்பு எப்படி ஒரு உணவின் சுவையை முழுமையாக்குகின்றதோ அதேபோல், உடல் ஆரோக்கியத்திலும் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஆனால் சமீபத்திய ஆய்வுகளின் அடிப்படையில், உப்பை அதிகமாக எடுத்துக்கொள்வதால் வயிற்றுப்புற்றுநோய் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இது குறைவான அல்லது சாதாரண அளவு உப்பு உட்கொள்ளும் நபர்களுடன் ஒப்பிடும்போது வயிற்றுப்புற்றுநோயின் அபாயத்தை இரண்டு மடங்கு வரை அதிகரிப்பதாக கூறுகிறது. எலிகள் மீது நடத்தப்பட்ட விலங்கு ஆய்வுகளால் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உப்பு, வயிற்றின் உட்புறத்தை சேதப்படுத்துகிறது. இதனால் வயிறு அமிலத்தால் சேதமடைவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

இது வயிற்றின் புறணியை குடல் வகை எனப்படும் வகையாக மாற்றலாம். இந்த வகை புறணி புற்றுநோயை உருவாக்கும் வாய்ப்பு அதிகம்.

வயிற்றில் உள்ள ஹெலிகோபாக்டர் பைலோரி என்ற பக்டீரியா உப்பு நிறைந்த சூழலில் நன்றாக வளர்கிறது. இந்த பக்டீரியாக்கள் வயிற்று புற்றுநோய்க்கான ஆபத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணியாகும்.

வயிறு புற்றுநோயை எப்படித் தடுக்கலாம்?

அதிகமாக உப்பு உட்கொள்வதைத் தவிர்ப்பதன் மூலம் வயிற்றுப் புற்றுநோய் பாதிப்பைத் தவிர்க்கலாம்.

சமைத்த உணவில் கூடுதல் உப்பு சேர்க்கக் கூடாது. உப்பு சேர்க்கப்பட்ட இறைச்சிகள் மற்றும் ஊறுகாய் போன்ற உப்பு நிறைந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.

பழங்கள் மற்றும் பச்சை இலை காய்கறிகளை உட்கொள்வது வயிறு புற்றுநோயிலிருந்து பாதுகாக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, அவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.

---

## வாரம் ஒரு மூலிகை அறிவோம்

**அகத்தி வேறு பெயர்கள் - அகத்திம், அச்சம், சுனி, காரீரம், முனிவிருட்சம், வக்ரபுஷ்பம்**


வானத்தில் அகத்திய முனிவரின் நட்சத்திரம் தோன்றுகின்ற காலகட்டத்தில் அகத்திமரம் பூக்கத் தொடங்குவதால் இதற்கு அகத்தியம் என்றும் முனிவிருட்சம் என்றும் வடமொழியாளர் பெயரிட்டழைக்கின்றனர்.

இதன் பூவானது வளைந்து வக்கரித்து அரிவாள் போல் காணப்படுவதால் இதற்கு வக்ரபுஸ்பம் என்னும் பெயரும் வழங்கப்படுகின்றது.

நோய் தீர்க்கும் மூலிகைகளில் அகத்தியும் ஒன்று. இது மரம் போன்ற (20 அடிமுதல் 30 அடிவரை) உயர்ந்து வளர்ந்த போதிலும் செடியினத்தைச் சேர்ந்ததேயாகும்.

இச்செடி மிக விரைவில் வளரக்கூடிய பயிர்வகையைச் சார்ந்ததாயினும் நீண்ட காலம் வாழக்கூடியதன்று.

**இதன்குணம்**





- கொழுப்பை குறைக்கும்
- மலம் இளக்கும்
- நாக்குப்பூச்சியைக் கொல்லும்
- சூட்டைத்தணிக்கும்
- தேக ஊறலை நீக்கும்
- பேதி உண்டாக்கும்
- வாய் நாற்றத்தை நீக்கும்
- வாய்புண்ணை நீக்கும்
- சொறி, சிரங்கு, அரிப்பு முதலிய தோல் நோய்களை குணமாக்கும்
- நரம்புகளை வலுவடையச் செய்யும்
- கண்பார்வை மிகும்
- ஆண்மை குறைபாட்டை நிவர்த்தி செய்யும் இளமையுண்டாகும்
- பெண்களுக்கு சூதகவலியை நீக்கும்.



---

# தாமரைவிதையை தொடர்ந்து சாப்பிட்டு வர மலச்சிக்கல் குறையும்

தாமரைவிதை (மக்கானா) அதன் மொறுமொறுப்பான தன்மை மற்றும் அதன் ஏராளமான ஆரோக்கிய நன்மைகள் காரணமாக சமீபத்தில் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது ஒரு சுவையான சிற்றுண்டியாகவும் கறிகள் மற்றும் இனிப்புகளில் சேர்க்கப்படும் ஒன்றாக உள்ளது. இதன் குறைந்த கலோரிகள் அனைவருக்கும் ஏற்றதாக உள்ளது.

தாமரை விதை காய்களை கொண்டுள்ளது, மேலும் ஒவ்வொரு காய்களிலும் தோராயமாக 20 விதைகள் உள்ளன. இந்த விதைகள் 40 நாட்களுக்குள் முதிர்ச்சியடைந்து, பின்னர் அதிக தீயில் வறுத்தெடுக்கப்படும். அதிக தீயில் வறுக்கும்போது, வெளிப்புற ஷெல் உடைந்து, வெள்ளை பஃப் வெளியே வரும். வெள்ளைப் பஃப் கொண்ட விதைகளை மக்கானா என்று அழைக்கிறோம்.

**மக்கானா உடலுக்கு தரும் நன்மைகள்:**

- மக்கானா புரதம், நார்ச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் பிற நுண்ணூட்டச்சத்துக்களின் நல்ல மூலமாகும்.


தாமரை விதைகள் குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளன. இது குளுக்கோஸ் அளவை பராமரிக்கவும் உதவுகிறது.

- மக்கானா ஒரு சிறந்த குறைந்த கலோரி சிற்றுண்டி. உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் இதனை தேர்வு செய்யலாம்.
- மக்கானாவை தொடர்ந்து உட்கொள்வது மலச்சிக்கலைத் தடுக்கிறது மற்றும் செரிமானத்தை ஒழுங்குபடுத்துகிறது என்று ஆராய்ச்சி கூறுகிறது.
- வயிற்றுப்போக்கு சிகிச்சை மற்றும் நிறுத்த பாரம்பரிய மருத்துவத்தில் மக்கானா பயன்படுத்தப்படுகிறது.
- மக்கானாவில் ஆக்ஸிஜனேற்றங்கள் நிறைந்துள்ளன, இது சுவாச மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன.
- மக்கானாவில் உள்ள அமினோ அமிலங்கள் சருமத்தை மென்மையாகவும் மிருதுவாகவும் வைத்திருக்கும்.
- மக்கானா கல்சியத்தின் சிறந்த மூலமாகும், இது எலும்புகளில் வலிமையை உருவாக்க உதவுகிறது.
- மக்கானாவில் நல்ல அளவு தியாமின் உள்ளது. இது அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது.



## சதொச ஊழியர்களை பணியிலிருந்து நீக்கியமை ;

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு ஜூன் 3 ஆம் திகதி விசாரணை



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஜூன் 3 ஆம் திகதி, சாட்சி விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று (21) உத்தரவிட்டது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது சதொச ஊழியர்களை பணியிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை நேற்று கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். எஸ்.எஸ். சப்புவித முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான அதிகாரி, உத்தியோகபூர்வ வேலைக்காக வெளிநாட்டில் இருப்பதால், சாட்சியங்களை ஆய்வு செய்வதற்கு வேறு ஒரு திகதியை வழங்குமாறு நீதிமன்றத்தை கோரினார்.

அதன்படி, மேலதிக சாட்சி விசாரணைகளை ஜூன் 3 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்தார், மேலும் அன்றைய தினம் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

## நான்கு லொறிகள் ஒரே நேரத்தில் விபத்து ; இருவர் படுகாயம்

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

யாழ்ப்பாணம் கண்டி ஏ 09 வீதியில் மதவாச்சி கல்கந்தகம வித்தியாலயத்திற்கு முன்பாக (21) நேற்று அதிகாலை லொறியொன்று மூன்று லொறிகளுடன் மோதியதில் இருவர் காயமடைந்துள்ளதாக பூநேவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மூன்று லொறிகள் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பின்னால் வந்த மற்றுமொரு லொறி மற்றைய லொறிகளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பூநேவ பொலிஸார் தெரிவித்தனர்.


இந்த விபத்தில் நான்கு லொறி களும் சேத மடைந்துள்ளதுடன் லொறிகளில் பயணித்த இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகி யுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## புதிய மாணவர் வரவேற்பு விழா இன்று

( எம் எம் எம் சியாஜ்)

கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலையின் 2025 ஆண்டிற்கான புதிய மாணவர்கள் வரவேற்பு விழா புதன்கிழமை இன்று (22) காலை பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் வடமேல் மாகாண பாலர் பாடசாலை பொறுப்பதிகாரி திருமதி ரூபிகா மற்றும் கற்பிட்டி பிரதேச செயலக பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பதிகாரி எம்.நிப்ராஸ் ஆகியோருடன் அந்நூர் இளைஞர் கழகத்தின் தலைவர் நியாஸ்தீன், செயலாளர் நாசர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இரத்மலானையில் பொங்கல் விழா





தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஏற்பாட்டிலான தைப் பொங்கல் விழா இரத்மலானையில் உள்ள சபையின் பிரதான காரியாலய முன்றலில் நடைபெற்றது. பூஜை வழிபாடுகளும் இதன் போது இடம்பெற்றன. சபையின் தலைவர் பொறியியலாளர். தீப்தி யு. சுமணசேகர, பொது முகாமையாளர் ரீ. பாரதிதாசன் உட்பட உயரதிகாரிகள் என பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: பீ.எம் முக்தார்)

# சிறுபான்மையினருக்காக குரல் கொடுத்தவர் விக்டர் ஐவன்

## முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ராவய பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும் நாட்டின் ஊடகத்துறையில் தனக்கென தனித்து வமான பெயரை உருவாக்கி, இலங்கை ஊடகத்துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய விக்டர் ஐவனின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவனின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சார்பில் அதன் தலைவர் என்.எம். அமீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது,

சுதந்திர ஊடக அமைப்பின் ஆரம்ப அங்கத்தவராக காலஞ்சென்ற விக்டர் ஐவன், அதன் ஏற்பாட்டாளராகவும், பொதுச் செயலாளராகவும் பதவி வகித்து ஊடகத்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரும் பங்களிப்புச் செய்தார்.

அவர் இந்த நாட்டின் புலனாய்வு ஊடகத்துறைக்காக தான் ஆரம்பித்த ராவய பத்திரிகையின் மூலம் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினார்.

நாட்டில் நீதித்துறை சுதந்திரத்திற்காக ஊழல் மிகு நீதிவான்களோடு மோதி அவர்களது செயற்பாடுகளை அம்பலப்படுத்தி, நீதித்துறை சுதந்திரத்தோடு செயற்படுவதற்கு அச்சம், பீதி இன்றி அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அவர் பெயர் இலங்கையில் ஊடக வரலாற்றில் விஷேடமாக இடம்பெறும். கருத்து சுதந்திரம், தகவல் அறியும் உரிமைக்காக எப்போதும் குரல் கொடுத்த விக்டர் ஐவன், அவற்றைப் பேணுவதற்கும் முன்னேற்றுவதற்குமாகச் செயற்பட்டார்.

சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தனது எழுத்து மூலம் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். நாட்டில் முஸ்லிம்கள் பிரச்சினைகளின் போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க எவ்வித தயக்கமும் பாராது குரல் கொடுத்து வந்தார். முஸ்லிம் மீடியா போரத்தின் மூன்று தசாப்த பணிகளில் விக்டர் ஐவன் பல விடயங்களில், பல சிறுபான்மையினர் முகம் கொடுக்கும் போது குரல் கொடுத்ததை நன்றியுடன் நினைவு கூருகின்றோம் இவ்வாறு அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

( எம்.ரீ.ஆரிப் )

மதவாச்சி ஹஹமல்கொல்லாவ பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவன் பொலிஸ் அதிரடிப் படையினரால் (20) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம்பகுதியைச்சேர்ந்த27வயதுடைய இளைஞன் ஆவார்.சந்தேக நபரிடமிருந்து 30 போதை மாத்திரைகளை கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மதவாச்சி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

அநுராதபுரம் கவறக்குளம் வீதியில் விமானப் படை முகாமிற்கு முன்னால் இடம்பெற்ற விபத்தில் 19 வயது இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக போக்குவரத்து பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியில் இருந்து கவரக் குளம் பகுதிக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கார் ஒன்றை முந்திச் செல்வதற்கு முற்பட்ட போது எதிர் திசையில் வந்து கொண்டிருந்த வாகனம் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கல்குளம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

## உளுக்காப்பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அடிக்கல் நாட்டு விழா



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட உளுக்காப் பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நீண்ட கால தேவையாக காணப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தினை முஸ்லிம் ஹேன்ட்ஸ் நிறுவனம் வழங்கி வைத்துள்ளது.

க.பொ.த. உயர் தரம் வரை 1100 மாணவர்கள் கற்கின்ற இந்த பாடசாலைக்கு ஆறு வகுப்பறைகளைக் கொண்ட மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை முஸ்லிம் ஹேன்ட்ஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் முஹம்மது மிஹ்லார் நாட்டி வைத்து இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

உளுக்காப்பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் பி.எம்.எம் நளீம் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வினை உளுக்காப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள சகல நிறுவனங்களையும் உள்ளடக்கிய கூட்டுறவுச் சங்கம் முன்னின்று நடாத்தியது.

கஷ்ட பிரதேச பாடசாலையான இந்த உளுக்காப்பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு கட்டடமொன்றினை வழங்கி வைத்தமைக்காக முஸ்லிம் ஹேன்ட்ஸ் நிறுவனத்திற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம். எம்.சியாத் மனமார்ந்தநன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

## கற்பிட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 2025 ம் ஆண்டிற்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் மிலங்க பிரசாத் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் தலைவரும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே.எம் பைசல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் கிஹான், கயான் ஜானக மற்றும் தேசிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச இணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கற்பிட்டி விஜயா கடற்படைத் தளபதி, கற்பிட்டி மற்றும் நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கற்பிட்டி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர், பாலக்குடா விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி, கண்டக்குளிவன ஜீவிஅலுவலக அதிகாரிகள், கடற்றொழில் அலுவலக அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கற்பிட்டி பிரதேச சுகாதார மற்றும் சுற்றுச்சூழல், உல்லாச பயணத்துறை, கடற்றொழில் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலை, மீன்பிடி முறை பற்றியும், மழை வெள்ளத்தின் தாக்கம் விவசாய உற்பத்தியின் பாதிப்புக்கள், காட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் அதற்காக பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் போதைப் பொருள் பாவனை அதனை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் என பல்வேறு அபிவிருத்தி திட்ட செயற்பாடுகள் மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் அடிப்படை தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

4ஆம் பக்கத் தொடர் **டொனால்ட் ட்ரம்ப் ....**

இந்த உத்தரவு வந்தது. ட்ரம்ப் திங்கட்கிழமை அவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்றும் கோரினார்.

**குடியேற்றம்**

பைடனின் ஜனாதிபதி பதவியில் இருந்து ட்ரம்ப் பல குடியேற்ற உத்தரவுகளை மாற்றினார், இதில் கடுமையான குற்றங்களைச் செய்பவர்கள், தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களாகக் கருதப்படுபவர்கள் அல்லது எல்லையில் நிறுத்தப்பட்டவர்கள் நாடுகடத்தப்படுவதற்கான முன்னுரி மைகளைக் குறைத்தார். சட்டவிரோதமாக நாட்டில் உள்ள அனைவரும் நாடு கடத்தப்படுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற ட்ரம்பின் முதல் காலக் கொள்கைக்கு இது அரசாங்கத்தை திருப்பி அனுப்புகிறது.

ஜனாதிபதி அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் தேசிய அவசரநிலையை அறிவித்தார், மேலும் அவர் குடியேற்ற முகவர்களுக்கு உதவும் அதிகள் மற்றும் புகலிடத்தை கட்டுப்படுத்தவும் அமெரிக்க படையினரை அனுப்ப திட்டமிட்டுள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்கள் மெக்சிகோ எல்லையில் காத்திருக்குமாறு கட்டாயப்படுத்தும் கொள்கையை மறுதொடக்கம் செய்வதாகவும் அவர் உறுதியளித்துள்ளார், ஆனால் மெக்சிகோ மீண்டும் குடியேறியவர்களை ஏற்றுக்கொள்ளுமா என்று அதிகாரிகள் கூறவில்லை. முந்தைய முயற்சியின் போது, எல்லையில் கொடூரமான மற்றும் கொடூரமான முகாம்கள் வளர்ந்தன மற்றும் கும்பல் வன்முறையால் சிதைக்கப்பட்டன. ட்ரம்ப்பிறப்புரிமைகுடியுரிமையைமுடிவுக்குக் கொண்டுவருவதாக உறுதியளிக்கிறார், ஆனால் அவர் அதை எவ்வாறு செய்வார் என்பது தெளிவாகத் தெரியவில்லை – இது அமெரிக்க அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 1 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கு சட்டப்பூர்வ நுழைவை வழங்கிய பிடன் கால எல்லை பயன்பாடான சிபிபி ஒன் முறையை ட்ரம்ப் முடிவுக்குக் கொண்டுவந்தார்.

**காலநிலை ஒப்பந்தம்**

எதிர்பார்த்தபடி, பாரீஸ் பருவநிலை ஒப்பந்தங்களில் இருந்து அமெரிக்காவை முறையாக விலக்கிக் கொள்வதாகக் கூறிய ஆவணங்களில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். அவர் தனது முதல் பதவிக் காலத்தில் அதே நடவடிக்கையை மேற்கொண்டார், ஆனால் பைடன் அதை மாற்றினார்.

**கூட்டாட்சி அதிகாரத்துவத்தை மாற்றியமைத் தல்**

பெயரிடப்படாத இராணுவம் மற்றும் அரசாங்கத்தின் பிற பகுதிகளைத் தவிர, மத்திய அரசாங்கத்தின் பணியமர்த்தலை ட்ரம்ப் நிறுத்தியுள்ளார். அவர் தனது இரண்டாவது நிர்வாகத்தை உருவாக்கும்போது புதிய கூட்டாட்சி விதிமுறைகளை முடக்கினார். கூடுதலாக, நிர்வாகங்களில் மாற்றங்கள் மூலம் வேலைகள் பாதுகாக்கப்படும் தகுதி அமைப்பு ஊழியர்களைக் காட்டிலும் சில ஊழியர்களை அரசியல் நியமனம் பெற்றவர்களாக மறுவகைப்படுத்துவதன் மூலம் ஆயிரக்கணக்கான கூட்டாட்சி ஊழியர்களை பணிநீக்கம் செய்வதை எளிதாக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலோன் மஸ்க் தலைமையிலான அரசாங்கத் திறன் துறை என்று அழைக்கப்படும் துறைக்கு ட்ரம்ப் முறையாக அதிகாரம் அளிக்க உள்ளார். பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் மற்றும் திருநங்கைகளின் உரிமைகள், ட்ரம்ப் திருநங்கைகளுக்கான பாதுகாப்பை திரும்பப் பெறுகிறார் மற்றும் மத்திய அரசாங்கத்திற்குள் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்குதல் திட்டங்களை நிறுத்துகிறார்.

இரண்டும் கூட்டாட்சிக் கொள்கைக்கான முக்கிய மாற்றங்களாகும் மற்றும் ட்ரம்பின் பிரச்சார வாக்குறுதிகளுக்கு ஏற்ப உள்ளன. ஒரு ஆணை மத்திய அரசு இரண்டு மாறாத பாலினங்களை மட்டுமே அங்கீகரிக்கும் என்று அறிவிக்கும் : ஆண் மற்றும் பெண். இந்த உத்தரவின் கீழ், புலம்பெயர்ந்தோர் மற்றும் கற்பழிப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கான கூட்டாட்சி சிறைகள் மற்றும் தங்குமிடங்கள் ஆணை வரையறுக்கப்பட்டுள்ளபடி பாலினத்தால் பிரிக்கப்படும். மேலும் கூட்டாட்சி வரி செலுத்துவோர் பணத்தை "மாற்ற சேவைகளுக்கு" நிதியளிக்க பயன்படுத்த முடியாது.

# மாகாண செலவுகளை கட்டுப்படுத்த நிறுவன ரீதியான முயற்சிகள் அவசியமென்கிறார் ஆளுநர்

(ஏ.எச். ஹஸ்பர்)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக செலவுகளைக் கட்டுப்படுத்த நிறுவன மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கிடையேயான கலந்துரையாடல் திங்கள் கிழமை (20) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அரச நிறுவன மட்டத்தில் தூய்மை இலங்கை *(Clean Sri Lanka)* குறித்த விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்துவது குறித்து அமைச்சுகள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர,

ஒக்டோபர் 2024இற்கு முன்பு, அலுவலகத்தின் வாகனங்களுக்கான மாதாந்த எரிபொருள் செலவு ரூ. 1.62 மில்லியன் செலவுகளாக இருந்தது. ஒக்டோபர் முதல், மாதாந்த எரிபொருள் விநியோக செலவு எரிபொருள் வாகனங்களுக்கான கட்டணம் ரூ. 2-3 இலட்சங்களாக குறைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. பயன்படுத்தப்படாமல் இருக்கும் பழுதடைந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பயன்படுத்த முடியாத வாகனங்களை சட்டப்பூர்வமாக ஏலம் விடவும், மாகாண சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் பாழடைந்த நிலை குறித்து கவனம் செலுத்தி பராமரிப்பை மேற்கொள்ளவும் மாகாண சபையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றில் வேலை செய்யுங்கள் என நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில், மாகாண அமைச்சுக்கள் மற்றும் துறைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடப் பட்டன.

## கிழக்கு அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(கியாஸ் ஷாபி)

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கிடையேயான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (20) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரச நிறுவனங்கள் மட்டத்தில் கிளீன் ஶ்ரீலங்கா வேலைத் திட்டம் குறித்து விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்துதல், இதற்காக அரச ஊழியர்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக, திணைக்கள தலை வர்களுக்கு தெளிவூட்டப்பட்ட ன.

மேலும், மாகாண சபையில் வீண் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துவது தொடர்பாகவும், மாகாண சபைகளில் வீண் செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் இங்கு ஆலோச னைகள் வழங்கப்பட்டன.

மேலும் இந்தக் கூட்டத்தில், மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடப் பட்டன.

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பதவியேற்றார் அஸீம்

(எஸ்.எம்.அறூஸ்)



அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட மருத முனையைச் சேர்ந்த எஸ்.எல்.ஏ.எஸ்.அஸீம் நேற்றுக் காலை பதவி யைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த கமல் நெத்மினி ஜனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

எனவே இவ்விடத்துக்கு ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கல்முனை மாநாகர சபையின் பிரதி ஆணை யாளராகக் கடமையாற்றும் எஸ். எல்.ஏ.எஸ்.அஸீம் நியமிக்கப்பட் டிருந்தார்.

நேற்றுக் காலை புதிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல்.ஏ.எஸ்.அஸீம் பதவியேற்கும் நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் ஏ.டி.எம். ராபி, அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் என். எம்.நௌபீஸ் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றும் நிலையிலேயே பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளராகவும் எஸ். எல்.ஏ.எஸ்.அஸீம் கடமை யாற்றவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட் டுள்ள எஸ்.எல்.ஏ.எஸ்.அஸீம் கிழக்கு மாகாண சுகாதார அமைச் சின் உதவிச் செயலாளராகவும் மிகச்சிறப்பாகக் கடமையாற்றி பலரினதும் நன்மதிப்பைப் பெற்ற ஒருவர் என்பதுடன் கல்முனை மாநகர சபையின் சிறந்த செயல்பாட்டிற்கும் முழுமையான பணிகளை மேற்கொண்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

## 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும்

(துஷாரா)

மட்டக்களப்பு - தாண்டியூர் ஶ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தின் மஹா 1008 சங்கா பிஷேகமும் பாற்குட பவனியும் நாளை மறுதினம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள் ளது.

நவமி திதியும் அனுச நட்சத்திரமும் கூடிய காலை 8.00 - 12.00 வரையுள்ள சுபநேரத்தில் தமிழ் மாதம் தை 11ஆம் திகதி 4ஆவது 1008 மஹா சங்காபிஷேகமும், பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளதனால் எம் பெருமானின் அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஆலயத்தில் இடம்பெறுகின்ற கிரியைகள், பூஜை, ஆராதனை களிலும் கலந்துகொண்டு எம் பெருமானின் அருளினை பெற்றேகுமாறு இறையன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கரையாக்கன்தீவு அருள்மித ஶ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இருந்து காலை 8.00 மணிய ளவில் பாற்குடப்பவனி எடுத்து வரப்படும் என்றும் பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்களும், பெருமானின் சங்காபிஷேகத்துக்கு உபயம் செய்ய விரும்புவோரும் ஆலய பரிபாலன சபையினரை தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

## இணைப்பாளர் இன்றி இயங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை

(றிசாத் ஏ.காதர்)

கிழக்கு மாகாணத்தில் அம் பாறை, மட்டக்களப்பு மற்றும் திரு கோணமலை மாவட்டங் களிலுள்ள ஆயுர்வேத வைத் தியசாலைகளை நிருவகிக்கும் பொருட்டு அம் மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இணைப்பாளர் ஒருவர் ஏற்கனவே நியமிக்கப்பட்டு நிருவாக நடவ டிக்கைகள் இலகுபடுத்தப்பட்டன.

எனவே தற்போது அந்த பதவிகளுக்கு எவரும் நியமிக் கப்படாமையினால் நிருவாக நடவடிக்கைகள், உத்தியோகத் தர்கள் மற்றும் ஊழியர்களின் பதவியுயர்வு , நலன்சார் விடயங்கள் போன்றவற்றை துரிதமாக மாகாண ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதில் பல்வேறு கால தாமதங்கள் ஏற்படுகின்றன.

ஆயுர்வேத வைத்தியசாலை களின் இணைப்பாளர் பதவி என்பது புதிதான ஒரு பதவியல்ல. ஏற்கனவே மூன்று மாவட்டங்களுக்கும் நான்கு பேர் கடமையாற்றியிருந்த ஒரு பதவியாகும். திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு தலா ஒருவரும் அம்பாறை மாவட்ட கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை யினை மையப்படுத் தியதாக இரு வரும் நியமிப்புச் செய்யப்பட்டு கடமையாற்றி வந்தனர்.

டொக்டர் திருமதி பாஸ்கரன் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பா ளராக கடமையாற்றிய தருணத் திலே சுதேச மருத்துவ ஆணையா ளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றார். அதன் பின்னர் இணைப்பாளர் பதவிக்கு எவரும் நியமிப்புச் செய்யப்படவில்லை. அத்துடன் கல்முனை பிராந்திய இணைப்பாளராக கடமையாற்றிய டொக்டர் எம்.ஏ. நபீல் தற்போது மாகாண ஆணையாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளத னால் கல்முனைக்கான இணைப் பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இவ்வாறு ஏனைய பிராந்தியங்க ளுக்கான பதவிகளும் வெற்றிட மாகியுள்ளன.

எனவே குறித்த பதவிக்கு சேவை மூப்பு , சிரேஷ்டத்துவம் அடிப்படையில் பொருத்தமான வர்களை நியமித்து ஆயுர்வேத வைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு உதவுமாறு ஆயுர்வேத வைத்தி யர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாயநாயக்கவின் சிந்தனைக்கு அமைவாக சிறந்த தேசம் ஒன்றினை கட்டியெழுப்ப, சேவை களை மக்களின் காலடிக்கு சென்று வழங்குதனை முன்னிலைப்படுத் தும் இந்த தருணத்தில் இந்தக் கோரிக்கையினை கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர நடைமுறைப்படுத்துவார் என தாம் நம்புவதாக ஆயுர்வேத வைத்தி யர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

## பொத்துவிலுக்கு பிரதேச செயலாளரை நியமிக்குமாறு உதுமாலெப்பை எம்.பி கோரிக்கை



(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கடந்த 7 மாத காலமாக பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளதால் அப்பிரதேச மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அப்பிரதேச செயலகத்திற்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங் கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செய லாளர் எஸ்.ஆலோக பண்டாரவை நேரடியாக அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் அப்பிரதேச மக்கள் பல பிரச் சினைகளுக்கும் முகம் கொடுத்து வந்துள்ளனர். இன்னும் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்றால் நிரந்தரமான பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் பிரதேச செயலா ளர் வெற்றிடத்தினை நிரப்புவதற் காக அம்பாறை மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அம்பாறை மாவட்ட செயலாளரினால் சிபாரிசு செய்தும் இதுவரையும் பொத்துவில் பிரதேச செயலகத்திற் கான செயலாளர் நியமனம் செய் யப்படவில்லை என்ற விடயத்தை யும் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவிடம் எடுத்து ரைத்தார்.

பொத்துவில் பிரதேச செயல கத்திற்கான நிரந்தர பிரதேச செய லாளர் ஒருவரை மிக விரை வில் நியமிப்போம் என்ற உத்தரவா தத்தை பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செய லாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

## பதவி உயர்வு பெற்ற அஸ்மிக்கு கௌரவம்




(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கிழக்கு மாகாண உள்ளூ ராட்சி மன்றங்களின் மாகாண ஆணையாளராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற பொத்துவில் ஏ.எல்.எம்.அஸ்மியை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு திங்கட் கிழமை (20) பொத்துவில் ப்ளுவே ஹோட்டலில் இடம்பெற்றது.

பொத்துவில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில், அதன் தலைவர் தொழிலதிபர் எம்.எஸ்.அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ.பதுூர்க்கான், மௌலவி கே.அப்துல் அஸீஸ் (ஷர்க்கி), ஏ.நசுவுதீன், இம்ரான் மூசா, ஓய்வு பெற்ற அதிபர் என். கே.அப்துல் அஸிஸ், பள்ளிவாசல் உபதலைவர் எம்.ஏ.எல்.ஜௌபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஊடகவியலாளர்கள் நூருல் ஹுதா, ஹாரிஸுக்கு கௌரவ விருதுகள்



சிலோன் மீடியா போரத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு “இலங்கை நிர்வாக சேவை உயரதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்” நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன்போது பிராந்திய ஊடகவியலாளர்களான நூருல் ஹுதா உமர் மற்றும் ஹாரிஸ் ஆகியோருக்கு பாராட்டி கௌரவம் வழங்கப்பட்டன.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் போக்குவரத்து நெடுச்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ஜெகதீஸன் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு கௌரவித்தனர்.

# கண்டி - மஹியங்கனை பிரதான வீதி இரவில் மூடப்படும்

## கண்டி மாவட்டச் செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



கண்டி, மஹியங்கனை பிரதான வீதியில் பாறைகள் சரிந்து விழும் அபாயகரமான சூழ்நிலை காணப்படுவதால் இரவு வேளையில் வீதி மூடப்படும் எனக் கண்டி மாவட்டச் செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவித்துள்ளார்.

அதிக மழை காரணமாக இவ்வீதியில் பயணிப்பது ஆபத்தானது எனச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் நேற்று (21) நடைபெற்ற கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், உடுதும்பர பிரதேச செயலகம், தெல்தெனிய மற்றும் உடுதும்பர பொலிஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கண்டி மாவட்ட செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது. அதன்படி நேற்று பிற்பகல் 06.00 மணி தொடக்கம் இன்று காலை 06.00 மணி வரை குறித்த வீதி மூடப்படும் எனவும், ஆபத்தான நிலைமை குறையும் வரை இரவு வேளைகளில் வாகனப் போக்குவரத்தை இடைநிறுத்த உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

இந்த வீதியில் இரவு வேளைகளில் பயணிப்பது ஆபத்தானது என மாவட்டச் செயலாளர் இந்திக்க உடவத்த மேலும் தெரிவித்தார்.

# மாத்தளையில் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இருவர் பாதிப்பு

(மாத்தளை எம்.சதூர்தீன்)



மாத்தளை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக ஹலங்கொட பகுதியில் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உறவினர்கள் வீட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

உக்குவெல பிரதேச செயலகத்திற்குட்பட்ட பலகடுவ பன்சலதன்ன தோட்ட ஹலங்கொடவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தற்போது உறவினர் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுவர்கள் இடிந்து விழுந்துள்ளமையினால் வீட்டிலுள்ள பல பொருட்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நுவரெலியா - கந்தப்பளையில் அறுவடைக்குத் தயாரான மரக்கறி செய்கை வெள்ளத்தால் பாதிப்பு

நுவரெலியா கந்தப்பளை பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையினால் விவசாயம் செய்யும் தாழ் நிலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரினால் அறுவடைக்குத் தயாரான மரக்கறி வகைகள் பாதிக்கப்படும் அபாயத்தில் காணப்படுவதாகப் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் கந்தப்பளை புதிய வீதி பகுதியில் வெள்ள நீர் வீதியைக் கடந்த செல்வதனால் போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் கால்வாய்கள் முறையாகப் புனரமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படாமல் இருப்பதால், அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு விவசாய நிலங்களின் அழிவுக்குப் பிரதான காரணியாக அமைவதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். தொடர்ச்சியாகப் பெய்யும் மழையால் நுவரெலியாவில் பிரதான வீதிகளைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் பனி மூட்டம் மற்றும் மழையுடனான காலநிலை நிலவும் போது தமது வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு பயணிப்பதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனப் போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் லொறி விபத்து

(க.கிஷாந்தன், டி.சந்ரூ)

நுவ ரெலியாவிலிருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியில் ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் (20) இரவு விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ரதெல்ல குறுக்கு வீதியில் நானுஓயா சமர்செட் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வீதியில் அதிவேகமாகச் சென்ற குறித்த லொறியில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதிக்கு அருகில் உள்ள மண்மேட்டில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். விபத்தினால் லொறியில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும், லொறி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. கடந்த சில நாட்களாக ரதெல்ல குறுக்கு வீதியில் செல்லும் பல வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலைக்கு சுற்றுலா சென்ற டென்மார்க் பிரஜை மரணம்

சிவனொளிபாதமலைக்கு சுற்றுலா சென்ற டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 67 வயதுடைய உல்லாச பயணி ஒருவர் வழியில் தவறி விழுந்து உயிரிழந்.துள்ளார். ஊசி மலைப்பகுதியில் குறித்த நபருக்கு உடலில் ஏற்பட்ட உபாதை காரணமாக தவறி விழுந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். குறித்த நபரை ஊசி மலைப்பகுதியிலுள்ள பொலிசார் நல்லதண்ணி நகருக்கு தூக்கி வந்து அவசர அம்பூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளையில் உயிரிழந்துள்ளார் என நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணித்தவர் 67 வயதுடைய டென்மார்க் நாட்டைச் சார்ந்த ஜெப்டீன் எனவும் இவரது உடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளை ரிவஸ்டன் பகுதியில்

# பாரிய பஸ்களில் சுற்றுலா செல்வதற்குத் தடைவிதிப்பு

(மாத்தளை எம்.சதூர்தீன்)

மாத்தளை ரிவஸ்டன் வனப்பகுதியைப் பார்வையிட வரும் உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலா பயணத்திற்காக பாரிய பஸ்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சுற்றுலா பிரியாணிகளுக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கலாசார சமய மற்றும் பௌத்த சமய அலுவலக பிரதி அமைச்சர் கம கெதர திசாநாயக்க மற்றும் மாத்தளை மாவட்டச் செயலாளர் தேஜானி திலகரத்தின ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

மாத்தளையில் இருந்து இரதோட்டை ஊடக ரிவஸ்டன் வனப்பகுதிக்குச் செல்லும் வீதி மிகவும் ஒடுக்கமானதாகவும் ஆபத்தான பல வளைவுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது இதனால் இப்பிரதேசத்திற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் 54-57 ஆசனங்களைக் கொண்ட பஸ் வண்டிகளில் பிரயாணங்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. இப்பாதை ஒடுக்கமாகக் காணப்படுவதால் வளைவுகளில் இவ்வாறான வாகனங்கள் மாறுவதற்கு வழி விடுவதற்கும் சிரமமாக உள்ளதோடு ரிவஸ்டன் சுற்றுலா வனப் பகுதியில் வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும் இடப்பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

ஆகையால் ரிவஸ்டன் வனப்பகுதிக்குத் தற்காலிகமாக பாரிய பேருந்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

# மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்






கம்பளை கல்வி வலயத்திற்கு உட்பட்ட 10 பாடசாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கம்பளை சாஹிரா கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் சுமார் 200 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்வில் மத தலைவர்கள் அரச அதிகாரிகள் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கரவண்டி விபத்தில் யுவதி பலி - மூவர் படுகாயம்

(க.கிஷாந்தன்)



தலாத்துஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதி உயிரிழந்ததோடு, மேலும் மூவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி மஹியங்கனை பிரதான வீதியில் மயிலப்பிட்டி கீழ் பிரிவு பகுதியில் இவ்விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பகுதியிலிருந்து மாரக்ஷன உடுதெனிய பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றும், மயிலப்பிட்டி பகுதியிலிருந்து கண்டியை நோக்கிச் சென்ற பாடசாலை சேவை பஸ் ஒன்றும் நேர்க்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரில் 18 வயது மகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததோடு, தந்தை மற்றும் மற்றுமொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி ரிகலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, உயிரிழந்த யுவதியின் சடலம் மாரஸ்ஸன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த முச்சக்கரவண்டி முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவ்விபத்தினால் சில மணி நேரம் அவ்வீதியினுடான போக்குவரத்து தாமதம் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இவ்விபத்துக்குக் காரணமான பஸ் சாரதியை தலாத்துஓயா பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலாத்துஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விக்டோரியா சரணாலயத்தில் கஞ்சா பயிர்ச் செய்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

விக்டோரியா சரணாலயத்தில் கஞ்சா பயிரிடப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நன்கு வளர்ந்திருந்த 48 கஞ்சா மரங்களை அழிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து இரண்டு துப்பாக்கிகளையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த கஞ்சா யானை வேலியின் உள் எல்லையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதாகத் தெரிய வருகின்றன

வெளியாட்கள் குறித்த பாதுகாப்பு காடுகளுக்குள் நுழையாததால் யாருக்கும் சந்தேகம் வராத வகையில் இந்த கஞ்சா பயிர் செய்கை மிக நீண்ட காலமாகச் சூட்சகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மெதமஹநுவர மஹ தோரலியத்த பிரதேசத்தில் உள்ள ஒரு குழுவினர் இந்த கஞ்சா செய்கையை மேற்கொண்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.




தெல்தெனிய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஷான் அமரசிங்கவின் ஆலோசனைக்கமைய தெல்தெனிய பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவின் பதில் பொலிஸ் பரிசோதகர் விஜேரத்ன மற்றும் பிரதி பொலிஸ் பரிசோதகர் ஜயரத்ன ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

## தலித் சிறுமிக்கு நடந்த அநீதி

# 59 பேரால் பாலியல் வன்கொடுமை.!

## கேரளாவில் 57 பேர் கைது





கேரளாவில் தலித் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 59 பேரில் இதுவரை 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்தை சேர்ந்த 18 வயது தலித் சிறுமி ஒருவர் அங்குள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் பயின்றுவரும் நிலையில் அவரது நடத்தையில் மாற்றம் காணப்பட்டதையடுத்து அவருக்கு குழந்தைகள் நல குழுவினரின் கண்காணிப்பில் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அப்போது தனது 13 வயது முதல் தன்னை 62 பேர் பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக கூறி அச்சிறுமி அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

இதையடுத்து அவரது புகார் தொடர்பாக பெண் ஐபிஎஸ் அதிகாரி அஜிதா பேகம் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரணை மேற்கொண்டுள்ளது.

விசாரணையில், "கடந்த ஆண்டு அச்சிறுமி 12ஆம் வகுப்பு படிக்கும்போது இன்ஸ்டாகிராமில் நெருக்கமான இளைஞர் ஒருவர் அவரை இறப்பர் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று தனது 3 நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதனையடுத்து பத்தனம்திட்டா தனியார் பஸ் நிலையத்தில் இருந்து அச்சிறுமியை பலர் பல்வேறு இடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். மேலும் அச்சிறுமி 5 முறை கூட்டு பாலியல் கொடுமைக்கு ஆளாகியுள்ளார்" எனத் தெரியவந்தது.

இந்நிலையில் இந்த வழக்கை கண்காணித்து வரும் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் வி.ஜி.வினோத் குமார் கூறியதாவது: இந்த விவகாரத்தில் முதல் வழக்கு இலவம்திட்டா பொலிஸ் நிலையத்தில் கடந்த 10ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. விரிவான விசாரணைக்கு பிறகு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 59 பேரில் வெளிநாட்டில் இருக்கும் இருவரை தவிர ஏனைய அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் கடைசியாக ஞாயிற்றுக்கிழமை காலை 25 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குற்றவாளிகள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 4 பொலிஸ் நிலையங்களில் 30 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றவாளிகளில் 5 சிறுவர்களும் அடங்குவதாகவும் விசாரணையை முடித்து, விரைவில் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய வேண்டும் என்பதே பொலிஸாரின் நோக்கமாகும் என்றார்.

## பெண் மருத்துவர் கொலை வழக்கு:

# தீர்ப்பை எதிர்த்து மேற்குவங்க அரசு மேல்முறையீடு

மேற்கு வங்க மாநிலம் கொல்கட்டாவில், பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில்



கைது செய்யப்பட்ட சஞ்சய் ராய்க்கு, ஆயுள் தண்டனை விதித்து சியல்டா நீதிமன்றம் உத்தரவிட்டது. சஞ்சய் ராய் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து நீதின்றம் தீர்ப்பளித்ததுடன் 50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது என்று நீதிபதி அனிர்பன் தாஸ் கூறினார். மேலும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு ரூ.17 இலட்சம் வழங்க மேற்கு வங்காள அரசுக்கு உத்தரவிட்டார்.

### தந்தையாரும் உருக்கம்

இந்தநிலையில், பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி சஞ்சய் ராய்க்கு வழங்கிய தண்டனையை எதிர்த்து மேற்கு வங்க அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது . அதாவது குற்றவாளி சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என கொல்கத்தா உயர்நீதிமன்றுக்கு மேற்கு வங்காள அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

இது இவ்வாறிருக்க, படுகொலை செய்யப்பட்ட பெண் மருத்துவரின் தந்தை செய்தியாளர்களிடம் கூறும்போது




சி.பி.ஐ. தாக்கல் செய்த சான்றுகளின் அடிப்படையில் நல்லதொரு தீர்ப்பு அமையும் என நினைத்தோம் அந்த தீர்ப்பையே நீதிமன்றம் வழங்கியுள்ளது.

ஆனாலும், சி.பி.ஐ. மேற்கொண்ட விசாரணையில் எங்களுக்கு திருப்பதி இல்லை. அது தொடர்பில் எங்களிடம் நிறைய கேள்விகள் உள்ளன. எங்களுக்கு நீதி மட்டுமே வேண்டும். இழப்பீடு வேண்டாம். கொல்கத்தா பொலிஸார் தவறு இழைத்துள்ளனர்.

சி.பி.ஐ. மேலும் சில விடயங்களை செய்ய வேண்டும் என்றார். எங்களுடைய மகளின் உயிரிழப்பை விட அதிக வலியை கொல்கத்தா பொலிஸார் ஏற்படுத்தி இருந்தனர் என்றார்.




## தேடப்பட்ட தலைவர் ஜெயராம் ரெட்டி உட்பட

# 20 மாவோயிஸ்டுக்கள் சுட்டுக்கொலை



### பாரிய வெற்றி என்கிறார் அமித் ஷா



சத்தீஸ்கரில் நேற்று முன்தினம் இரவு கரியாபண்ட் மாவட்டத் தில் பாதுகாப்புப்படை யினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 மாவோ யிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ரூ.1 கோடி சன்மானத் தொகை அறிவிக்கப்பட்ட மாவோயிஸ்ட் ஒருவரும் அடங்குவதாக தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இந்த நடவடிக்கை "பாரிய வெற்றி" எனக் கூறினார். இந்திய ஊடகங்கள் இதனை செய்தியாக வெளியிட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் திங்கட்கிழமை கொல்லப்பட்ட இரண்டு பெண் மாவோயிஸ்டுகளும் அடங்குவர். குறித்த நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருவதனால், மாவோயிஸ்டுகளின் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒடிசாவின் கரியாபண்ட் மாவட்டத்தின் எல்லையில் இருந்து 5 கிமீ தொலைவில் உள்ள சத்தீஸ்கரின் குலாரிகாட் காப்புக் காட்டில் மாவோயிஸ்டுகள் இருப்பதாக கிடைத்த உளவுத்துறையின் அடிப்படையில் ஜனவரி 19 ஆம் திகதி இரவு முதல் குறித்த துப்பாக்கிச்சூட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

திங்களன்று நடந்த இந் நடவடிக்கையின் போது இரண்டு பெண் மாவோயிஸ்டுகள் நடுநிலையானார்கள், மேலும் துப்பாக்கிச் சூடு, வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் என்பன இதன்போது பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்டும் உள்ளன.

# திருச்செந்தூர் கோபுர கலசத்தில் அதிசயம்

### 15 ஆண்டுகளுக்கு பின்னும் கெடவில்லை

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் ராஜகோபுரத்தில் 9 கும்ப கலசங்களை புதுப்பித்து மீண்டும் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இதற்காக கோபுர கலசங்களை கீழே கொண்டு வந்தபோது அதில் வைத்திருந்த வரகு 15 ஆண்டுகளாகியும் கெட்டுப்போகாமல் அப்படியே இருந்தது.

திருச்செந்தூர் கோவிலில் விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அதாவது எதிர்வரும் ஜுலை மாதம் 7ஆம் திகதி கும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கும்பாபிஷேக விழாவையொட்டி கோவிலில் திருப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் இதற்கு 300 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் இந்த பணியில் தற்போது 80 சதவீத முடிவடைந்த நிலையில், இதன் ஒரு பகுதியாக கோவிலின் ராஜகோபுரத்தில் மேற்புறம் உள்ள கலசங்களை புதுப்பிக்கும் பணி நடைபெற்றது.



இதற்காக ராஜகோபுரத்தில் உள்ள 9 கலசங்கள் கழற்றி கீழே கொண்டு வரப்பட்டன. அப்போது அந்த கலசங்களில் வைக்கப்பட்டு இருந்த வரகு கெட்டுப்போகாமல் அப்படியே இருந்தமை பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

### மகா கும்பமேளாவில்

# முதல்முறையாக AI மூலம் பக்தர்கள் வருகை கணக்கெடுப்பு



உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் 12 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் சுமார் 45 கோடி பக்தர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மகா கும்பமேளாவுக்கு வருகைதரும் பக்தர்களை கண்காணிக்க முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை உ.பி. அரசு பயன்படுத்தி வருகிறது. பிரயாக்ராஜ் நகர் முழுவதும் ஆயிரக்கணக்கான சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் ஏராளமான பொலிஸார், அதிகாரிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் 24 மணி நேரமும் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுவருகின்றனர். அத்துடன் ஒவ்வொரு சதுர மீட்டருக்குள் எத்தனை பக்தர்கள் உள்ளனர் என்பதை கண்காணிக்க AI தொழில்நுட்பம் மூலம் கணக்கிட்டு வருகின்றனர். இந்நிலையில் களத்தில் இருந்தும் பக்தர்களின் எண்ணிக்கை குறித்து தகவல்கள் பெறப்படுட்டு வருகின்ளமை குறிப்பிடத்தக்கது.

# சயிப் அலிகான் கொலை முயற்சி: நடித்துக்காட்டுமாறு பணித்த பொலிஸார்



பொலிவுட் நடிகர் சயிப் அலிகான் தாக்குதல் சம்பவத்தில் குற்றக்காட்சியை மீண்டும் உருவாக்க கைது செய்யப்பட்டிருக்கும் குற்றம்சாட்டப்பட்டவரை அதனை நடித்துக்காட்டுமாறு கூறி பொலிஸார் நடிகரின் வீட்டுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அழைத்துச் சென்றதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில் "நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு 20 பேர் அடங்கிய பொலிஸ் குழு, குற்றம்சாட்டப்பட்ட நபரை சயிப் அலிகானின் இல்லமான சத்குரு ஷரனுக்கு அழைத்து சென்றது." அங்கு அந்தகுழு ஒரு மணிநேரம் வரை காணொளி எடுத்தனர்.

பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபரை சயிப் அலிகான் வீட்டின் முன்வாசல் வழியாக பொலிஸார் அழைத்துச் சென்ற அதேவேளை பின் குற்றவாளியை தாதருக்கு செல்ல ரயில் ஏறிய பாந்த்ரா புகையிரத நிலையத்துக்கு அழைத்து சென்றதுடன் தொடர்ந்து தாக்குதலுக்கு பின்பு குற்றவாளி தங்யிருந்த பூங்காவுக்கும் அழைத்து சென்றனர்.

பொலிவுட் நடிகர் சயிப் அலிகானை அவரின் வீட்டில் வைத்து கத்தியால் குத்திய சம்பவம் தொடர்பாக மும்பை பொலிஸார், குள்றவாளியை மத்தியப் பிரதேசத்தில் வைத்து கைது செய்ததுடன் பாந்திராவில் உள்ள பெருநகர நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்நிலையில் குற்றம்சாட்ட நபரை ஐந்து நாள் பொலிஸ் காவல் வைத்து விசராணை செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

## பரந்தூரில் விமான நிலையம்:

# விஜய்யின் கருத்துக்கு 'ஜி ஸ்கொயர்' நிறுவனம் கடும் எச்சரிக்கை



பரந்தூர் விமான நிலையத்தையும் தாண்டி இந்த ஆட்சியாளர்களுக்கு ஏதோ லாபம் இருக்கிறது என தவெக தலைவர் விஜய் பேசியிருந்த நிலையில் ஜி ஸ்கொயர் நிறுவனம் விளக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த இடங்களில் எங்கள் நிறுவனத்துக்கு எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்பு இல்லை இது தொடர்பில் எந்த ஒரு கட்சியானாலும் பொய்யான தகவல்களை பரப்பினால் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க பரந்தூரில் உள்ள விவசாயிகளை பரந்தூரில் திருமண மண்டபத்தில் உள்ள திறந்தவெளியில் விவசாயிகளை அவர் சந்தித்தார். அப்போது பிரசார வாகனத்தில் நின்றபடியே விஜய் பேசுகையில், நான் வளர்ச்சிக்கு எதிரானவன் அல்ல. விமான நிலையம் வரக் கூடாது என நான் கூறவில்லை. பரந்தூரில் அமைக்கக் கூடாது என்றுதான் நான் வலியுறுத்துகிறேன்.

என விஜய் பேசியிருந்தார்.


இதைத் தொடர்ந்து ஜிஸ்கொயர் நிறுவனத்திற்கு சொந்தமான நிலங்கள் பரந்தூரில் இருப்பதாக சமூகவலைதளங்களிலும் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகின. இதை மறுத்து உண்மை விளக்க அறிக்கை என்ற பெயரில் ஒரு அறிக்கையை ஜிஸ்கொயர் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக வலம் WORLD NEWS

பா. கிருஷிகா

# அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார் ட்ரம்ப்





அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் திங்கட்கிழமை பதவியேற்றார். ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளரும் முன்னாள் துணை ஜனாதிபதியுமான இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸ் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியை பெற முடியாமல் ஏமாற்றமடைந்தார். இந்நிலையில், 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றார். அதன்படி, கப்பிடல் எனப்படும் பாராளுமன்ற கட்டடத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

இதற்காக, ட்ரம்ப் அமெரிக்க தலைநகரான வொஷிங்டன் டி.சி.இற்கு நேற்று சென்றார். பிறகு, புளோரிடாவின் பாம் பீச்சிலிருந்து வொஷிங்டனுக்கு தனி விமானம் மூலம் தனது மனைவி, மகனுடன் புறப்பட்டுச் சென்றார். ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் உலக தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் பலர் கலந்துக் கொண்டனர்.

# சிட்னியில் யூத சிறுவர் பராமரிப்பு நிலையம் மீது தாக்குதல்!




சிட்னியில் அமைந்துள்ள ஒரு யூத சிறுவர் பராமரிப்பு நிலையம் செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை விசமிகளால் தீ வைக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் யூத சமூகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் அண்மைய நடவடிக்கை இதுவாகும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரின் கிழக்கில் அமைந்துள்ள யூத பாடசாலை மற்றும் ஜெப ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு நிலையம் இதனால் விரிவான சேதத்தை சந்தித்தது. எனினும், அந்நாட்டு நேரப்படி அதிகாலை 1 மணியளவில் நடந்த இந்த சம்பவத்தில் உயிரிழப்புகள் அல்லது காயங்கள் எதுவும் பதவாகவில்லை என சிட்னி நகர பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சிட்னியில் கடந்த நான்கு நாட்களில் யூத சொத்துக்கள் மீதான இரண்டாவது தாக்குதல் இதுவாகும். மேலும், அவுஸ்திரேலியாவின் அதிக மக்கள்தொகை கொண்ட நகரத்தில் யூத சமூகத்தை குறிவைத்து இதே போன்ற குற்றங்கள் நடந்து வரும் நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலுக்கு பிரதமர் அந்தோனி அல்பானீஸ் கண்டனம் வெளியிட்டுள்ள நிலையில் சிட்னி பொலிஸார் இது தொடர்பான விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளனர். 2023 ஒக்டோபர் 7, இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதல் மற்றும் காஸாவில் அடுத்தடுத்து நடந்த போருக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு மற்றும் இஸ்லாமிய வெறுப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# இரு அமெரிக்கர்களுக்கு ஈடாக ஆப்கான் கைதி விடுவிப்பு !




இரண்டு அமெரிக்கக் குடிமக்களுக்கு ஈடாக அமெரிக்கக் காவலில் உள்ள ஒரு ஆப்கான் கைதி விடுவிக்கப்பட்டதாக காபூல் வெளிவிவகார அமைச்சகம் செவ்வாய்க்கிழமையன்று (21) அறிவித்தது.

விடுவிக்கப்பட்ட கான் மொஹமட் என்ற ஆப்கானிஸ்தான் குடிமகன், போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அமெரிக்க நீதிமன்றங்களின் உத்தரவுக்கு அமைய ஆயுள் தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கலிபோர்னியா மாநிலத்தில் தண்டனை அனுபவித்து வந்தவர் ஆவார்.

அவர் ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணமான நங்கர்ஹறில் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். பின்னர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதனிடையே, தலிபான் நிர்வாகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித், இரண்டு அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டதை உறுதிப்படுத்தினார், ஆனால் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்த அவர் மறுத்துவிட்டார்.

# தாய்வானில் நிலநடுக்கம் 27 பேர் காயம்



தாய்வானின் தெற்கு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கின. இதில் 27 பேர் காயமடைந்தனர். தாய்வானில் நள்ளிரவில் தாக்கிய நிலநடுக்கமானது யூஜிங்கிற்கு வடக்கே 12 கிலோமீட்டர் (7.5 மைல்) தொலைவில் மையம் கொண்டிருந்ததாகவும் இது ரிக்டர் அளவுகோலில் 6.4ஆக பதிவானதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்களின் கூரைகள் இடிந்து விழுந்ததாகவும், 27 பேர் படுகாயமடைந்ததாகவும், பாரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. நள்ளிரவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் பீதி அடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

தாய்வானில் கடைசியாக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 7.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 25 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய நிடுநடுக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஹுவாலியனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலச்சரிவுகள் மற்றும் கட்டிடங்களை கடுமையாக சேதப்படுத்தியதுடன் 17 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# விசாரணையில் பங்கேற்ற தென்கொரிய ஜனாதிபதி

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் (Yoon Suk Yeol) செவ்வாய்க்கிழமையன்று (21) அரசியலமைப்பு நீதிமன்ற விசாரணையில் கலந்து கொண்டார்.


அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தலைவர் தனது வழக்கை வாதிட அல்லது இராணுவச் சட்டத்தை சுமத்துவதற்கான குறுகிய கால முயற்சியின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வாய்ப்பைப் பெறலாம். விசாரணையின் ஆரம்பத்தில், தற்காலிக தலைமை நீதிபதி மூன் ஹியுங்-பே பேச அழைத்தபோது, “சுதந்திர ஜனநாயகத்திற்கான உறுதியான அர்ப்பணிப்புடன்” தான் பொதுச் சேவையில் பணியாற்றியதாக யூன் தெரிவித்தார். வழக்கு விசாரணையில் அடர் சிவப்பு நிற கழுத்துப் பட்டியுடன் கடற்படை நிற உடையில் காணப்பட்ட யூன், நீதிமன்றத்தின் எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதாக உறுதியளித்தார்.

யூன், கடந்த டிசம்பர் ஆரம்பத்தில் இராணுவச் சட்டத்தை திணிக்க முயன்று கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார் என்பதற்கான தனி குற்றவியல் விசாரணையின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த வாரம் முதல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். யூனின் இராணுவச் சட்டம் தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது மற்றும் சில மணிநேரங்களில் நாடாளுமன்றத்தால் தோற்கடிக்கப்பட்டது. விசாரணைக்கு முன், அவரது வழக்கறிஞர்கள் குழு ஒரு அறிக்கையில், டிசம்பர் 3 அன்று இராணுவச் சட்டத்தை அறிவித்ததற்கான நியாயத்தை யூன் விளக்குவதாகவும், அவர் அழைக்க விரும்பும் சாட்சிகளின் பட்டியலை அவரது வழக்கறிஞர்கள் மூலம் கோருவதாகவும் தெரிவித்திருந்தார்.

யூன் தனது அரசியலமைப்பு கடமையை மீறியதாக குற்றம் சாட்டிய ஒரு பதவி நீக்க தீர்மானத்தை மறுஆய்வு செய்ய அரசியலமைப்பு நீதிமன்றம் டிசம்பர் 27 அன்று விசாரணையை ஆரம்பித்தது. அவரை பதவியில் இருந்து நிரந்தரமாக நீக்குவதா அல்லது மீண்டும் பணியில் அமர்த்துவதா என்பதை நீதிபதிகள் முடிவு செய்வார்கள். யூன் அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளால் விசாரிக்கப்படலாம் என நீதிமன்ற செய்தித் தொடர்பாளர் செவ்வாய்க்கிழமையன்று தெரிவித்தார்.

குறித்த வழக்கில் தென்கொரியாவின் முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி, சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் யூனின் மக்கள் அதிகாரக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் சேர்ந்து, டிசம்பர் 14 அன்று யூனை குற்றஞ்சாட்டுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வாக்களித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# துருக்கி ஹோட்டலில் தீ விபத்து 10 பேர் பலி



துருக்கியின் வடமேற்கு பகுதியில் உள்ள ஸ்கை ரிசார்ட் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 10 பேர் உயிரிழந்ததுடன் 32 பேர் காயமடைந்ததாக நாட்டின் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

போலு மாகாணத்தில் உள்ள கர்தல்காயா ரிசார்ட்டில் உள்ள ஹோட்டலில் ஏற்பட்ட தீ, உள்ளூர் நேரப்படி அதிகாலை 3:27 மணியளவில் பதிவாகியதாக துருக்கியின் உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா எக்ஸ் சமூக வலைத்தளத்தில் தெரிவித்தார்.

குளிர்காலத்தில், குறிப்பாக விடுமுறை நாட்களில், ஜனவரி முதல் பெப்ரவரி முதல் வாரம் வரை விடுமுறைக்கு வருபவர்களுக்கு இந்த ஹோட்டல் ஒரு பிரபலமான இடமாகும். ஹோட்டலில் சுமார் 234 விருந்தினர்கள் தங்கியிருந்ததாக ஆளுநர் அப்துல்அஜிஸ் அய்டின் அரசு நடத்தும் அனடோலு ஏஜென்சியிடம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களில் இருவர் பயத்தின் காரணமாக கட்டிடத்திலிருந்து குதித்து இறந்தனர் என அய்டின் தெரிவித்தார். தீயை அணைக்க அவசரகால பணியாளர்களை ஈடுபடுத்தியுள்ளதாக யெர்லிகாயா தெரிவித்தார்.

# ஐ.சி.சி மகளிர் U19; இலங்கை 81 ஓட்டங்களால் வெற்றி



ஐ.சி.சி மகளிர் U19 உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை-மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 81 ஓட்டங்களில் சிறப்பான வெற்றியை நேற்று பதிவு செய்தது. இப் போட்டியில் இலங்கை அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இலங்கை அணி, இதுவரை இல்லாத அளவுக்குப் போட்டியின் மிகப்பெரிய ஓட்டங்களைப் பதிவு செய்து, தங்கள் சொந்த சாதனையை முறியடித்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகக் கோலாலம்பூரில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 166 ஓட்டங்களை முதலில் பெற்றுக் கொண்டது. வெற்றி இலக்கான 166 ஓட்டங்களைத் துரத்திய

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வரிசை தொடராகச் சரிந்ததால்

20 ஓவர்களில் 85 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இலங்கையின் ஆரம்ப ஆட்டக்காரர்களான சஞ்சனா கவிந்தி (36 பந்துகளில் 38) மற்றும் சுமுது நிசான்சலா (22 பந்துகளில் 19) ஆகியோர் முதல் விக்கெட்டுக்கு ஏழு ஓவர்களில் 54 ஓட்டங்களை எடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் செலினா ரோஸ் பந்துவீச்சாளர்களில் ஒருவராக 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.




# ரக்பி சங்கத்தின் நிர்வாக குழு தெரிவுக்கு இடைக்காலத் தடை

இலங்கை ரக்பி சங்கத்தின் நிர்வாக குழுத் தெரிவு நேற்று நடைபெறவிருந்த நிலையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரக்பி சங்கத்தின் முன்னாள் தலைவர் லசித குணரத்ன தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்த கொழும்பு தலைமை மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த தடை உத்தரவு அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும், அன்றைய தினம் இதற்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் சமர்ப்பிக்குமாறும் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த மனுவில் ரக்பி தேர்தல் குழுவின் தலைவர் உட்பட அதன் உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு இயக்குநர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப் பட்டுள்ளனர்.

SRI LANKA RUGBY
SINCE 1879

# சம்பியன்ஸ் கிண்ணத்தில் பும்ரா சந்தேகம்



2025 சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான அணியில் பும்ராவின் பெயர் இடம் பெற்று இருந்தாலும் அவர் விளையாடுவது உறுதியாகவில்லை எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில், பும்ராவை பரிசோதித்துப் பார்க்கத் தேர்வுக் குழு மற்றும் அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அவருக்கு ஒரு பரீட்சை நடத்தப்பட உள்ளது.

அந்த பரிசோதனையில் பும்ரா தேர்ச்சி பெற்றால் மட்டுமே சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாட முடியும். இல்லையெனில் அவருக்குப் பதில் மாற்று வேகப் பந்துவீச்சாளர் தேர்வு செய்யப்படுவார் என பிசிசிஐ வட்டாரத்திலிருந்து தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய அணி அடுத்து இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி20 தொடரில் விளையாட உள்ளது. அதன் பின் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரிலும் விளையாட உள்ளது. அந்த ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டியில் பும்ராவை விளையாட வைக்க அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

ஏனெனில், தற்போது காயத்தில் இருக்கும் பும்ராவால் முழு அளவில் ஒரு நாள் போட்டிகளில் பந்து வீச முடியுமா? என்பதை ஒரு சர்வதேச அளவிலான போட்டியில் பரிசோதித்துப் பார்த்த பின்னரே சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அவரை விளையாட வைக்க வேண்டும் எனத் தேசிய கிரிக்கெட் அகாடமியின் மருத்துவர் குழு ஆலோசனை அளித்து உள்ளது.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் பெத்தும் நிஸ்ஸங்கவுக்கு வாய்ப்பு இல்லை



இலங்கை துடுப்பாட்ட வீரர்களான பெத்தும் நிஸ்ஸங்க மற்றும் கமிந்து மென்டிஸ் காயமடைந்த நிலையில் அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடருக்கு முன்னரான இறுதி மருத்துவ பரிசோதனைகள் நேற்று முன்தினம் (20) நடத்தப்பட்டன, இதன் பின்னர் கமிந்து மெண்டிஸுக்கு டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் விளையாட முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இன்னும் முழுமையாகக் குணமடையாத பெத்தும் நிஸ்ஸங்கவிற்கு முதல் டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பு கிடைக்காது என தெரிவிக்கப்படுகிறது.

C.C.C மற்றும் S.S.C கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை (17) நடைபெற்ற மேஜர் கிளப் மூன்று நாள் போட்டியின் போது, கமிந்து மென்டிஸ் ஒரு பிடியை எடுக்க முயன்றபோது அவரது வலது கையில் காயம் ஏற்பட்டது. அவரது விரல்களுக்கு இடையே உள்ள சவ்வு சேதமடைந்துள்ளது, ஆனால் காயம் பெரிதாக இல்லாததால், முதல் டெஸ்ட் போட்டியிலிருந்தே கமிந்து மென்டிஸ் விளையாட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், நியூசிலாந்தில் நடந்த இறுதி ஒருநாள் போட்டியில் காலில் காயம் அடைந்த பெத்துமுக்கு, முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு அளிக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர், அதன்படி, தற்போது அவரை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்க வைக்கத் திட்டங்கள் நடந்து வருகின்றன.

இதற்கிடையில், பிக் பாஷ் லீக்கின் போது முழங்கையில் காயம் ஏற்பட்ட அவுஸ்திரேலியாவின் இடைக்கால கெப்டன் ஸ்டீவன் ஸ்மித், இலங்கை தொடரில் விளையாடுவார் என்பதை அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் (20) உறுதிப்படுத்தியது. முன்னர், இலங்கை போட்டிகளில் அவர் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமாக இருந்தது.

தற்போது துபாயில் பயிற்சி முகாமில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணியுடன் ஸ்மித் இணைந்து கொள்ளவுள்ளார், மேலும் இந்த வார இறுதிக்குள் அவர் துடுப்பாட்ட பயிற்சியைத் தொடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக செஸ் சம்பியன் மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்த பங்களாதேஷ் மாணவன்

ஐந்து முறை உலக செஸ் சம்பியன் வென்ற மேக்னஸ் கார்ல்சன், இணையவழிப் போட்டி ஒன்றில் 9 வயது பங்களாதேஷ் பாடசாலை மாணவனிடம் தோல்வியடைந்ததாக கூறப்படுகிறது. பங்களாதேஷ் நாளிதழில் வெளியான செய்தியின்படி, FIDE மாஸ்டரான பயிற்சியாளர் நைம் ஹக், தனது மாணவன் கார்ல்சனை தோற்கடித்ததாக கூறுகிறார்.

டாக்காவைச் சேர்ந்த மூன்றாம் வகுப்பு மாணவர் ரியான் ரஷீத் முக்தாவுக்கும் கார்ல்சனுக்கும் இடையில் இணையவழியில் நடந்ததாக கூறப்படும் போட்டி ஜனவரி 18ஆம் திகதி புல்லட் பிரால் முறையில் நடந்ததாக தி பிசினஸ் ஸ்டாண்டர்ட் தெரிவித்துள்ளது.

செஸ் வலைதளத்தில் (chess.com) உள்ள தனது கணக்கு மற்றும் ப்ரோபைலை தனது மாணவர் ரியான் ரஷீத்துக்கு வழங்கியதாக நைம் தெரிவித்துள்ளார். செஸ் வலைதளத்தில் விளையாடும் போது, ஒன்லைனில் அதிஷ்டவசமாக சிறுவன் கார்ல்சனுடன் விளையாடும் சூழல் ஏற்பட்டது. புல்லட் பிரால் முறையில் விளையாடும் போது, வீரர்கள் தங்கள் நகர்வுகளை முடிக்க ஒரு நிமிடம் மட்டுமே வழங்கப்படுகிறது.


இது குறித்து பேசிய நைம்,

நான் முக்தாவுக்கு சதுரங்கம் கற்று கொடுக்கிறேன். அவருக்கும் எப்போதும் இணையத்தில் விளையாட மட்டுமே பிடிக்கும். இதனால் நான் அவருக்கு என் செஸ் ஐடியைப் பயன்படுத்த அனுமதி அளித்திருந்தேன். பிறகு, அவர் திடீரென்று என்னை அழைத்து கார்ல்சனை தோற்கடித்ததாகக் கூறினார். முதலில், என்னால் அதை நம்ப முடியவில்லை. பின்னர் அவர் எனக்கு ஸ்கிரீன்ஷாட்கள் மற்றும் அனைத்து விளையாட்டு விபரங்களையும் அனுப்பினார். நான் ஆச்சரியப்பட்டேன், என்று தெரிவித்தார்.



## தெற்காசிய சிரேஷ்ட வீரர்

# தடகள சம்பியன்ஷிப்: இலங்கைக்கு 5 பதக்கங்கள்



இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற முதல் தெற்காசிய சிரேஷ்ட வீரர் தடகள சம்பியன்ஷிப்பில் ரசிக துஷாந்த விஜேசேன 5 பதக்கங்களை வென்றுள்ளார்.

35-39 வயதுக்குட்பட்ட பிரிவில் பங்கேற்ற ரசிக, 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 11.03 விநாடிகளில் ஓடித் தங்கப் பதக்கம் வென்று, தெற்காசியாவின் வேகமான அனுபவமிக்க தடகள வீரர் என்ற பெருமையைப் பெற்றார். அந்த வயதினருக்கான 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் சிரேஷ்ட தடகள சாதனையையும் அவர் முறியடித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற 10வது தேசிய சிரேஷ்ட வீரர் தடகள சம்பியன்ஷிப்பில், குறிப்பிட்ட வயதுப் பிரிவில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை 100 விநாடிகள் வித்தியாசத்தில் வென்றார். அவர் 11.20 நிமிடங்களில் முடித்து, பழைய சாதனையையே படைத்திருந்தார். 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்துடன் மேலதிகமாக 200 மீட்டர் பந்தயத்தில் ரசிக 23.20 விநாடிகளில் ஓடித் தங்கப் பதக்கத்தை வென்றார், நீளம் தாண்டுதலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அந்த வயதுப் பிரிவில் ஆண்களுக்கான 100 மீட்டர் மற்றும் 400 மீட்டர் மெட்லி ரிலே போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்ற அணிகளில் அவரும் உறுப்பினராக இருந்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 22ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.